
# இறையியல் கோலங்கள்

வடிவம் 35 ஜுலை - டிசெம்பர் 2016 வண்ணம் 2



புனித யோசவாஸ் அடிகளும் பொதுநிலையினரும்

புனித யோசவாஸ் அடிகளின் தூரநோக்கு

நற்செய்திப் பணியில்... புனித யோசவாஸ்

புனித யோசவாஸ் அடிகளாரின் மறைக்கல்வி அளித்தல் முறை

புனித யோசவாஸ் அடிகளில் காணப்பட்ட பணித்துவ மனநிலை

தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

Vol. : 35
No. : 02
July - December : 2016

வடிவம் : 35
வண்ணம் : 02
ஜூலை – டிசெம்பர் : 2016

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன்
அருட்தந்தை ஆ.ஜஸ்ரின்

நிர்வாகக் குழு : அருட்சகோ. அ.லியாண்ஸ்
அருட்சகோ. சூ.அஜித் சுலக்ஷன்
அருட்சகோ. சூ.எட்வின் நரேஸ்
அருட்சகோ. அ.அன்ரனி மரியதாஸ் குரூஸ்
அருட்சகோ. ஜே.நிலான் யூலியஸ்
அருட்சகோ. செ.டிஷாந்தன்

Editor : Rev. Fr. T.J.Kirupaharan

Sub Editors : Rev. Fr. I. Petrus Thayaparan
Rev. Fr. A.Justin

Administrative Board : Rev. Bro. A.Liyans
Rev. Bro. S. Ajith Sulaxshan
Rev. Bro. S.Edwin Naresh
Rev. Bro. S.Antony Mariyathas Croos
Rev. Bro. J.Nilan Julius
Rev. Bro. S.Dihanthan

Publication : St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No. : 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

♣ ஆசிரியர் உரை

♣ புனித யோசவாஸ் அடிகளும் பொதுநிலையினரும்
அருட்கலாநிதி ஞா.வி.பிலேந்திரன்

♣ புனித யோசவாஸ் அடிகளின் தூரநோக்கு
அருட்கலாநிதி ச.வி.ப.மங்களராஜா

♣ நற்செய்திப் பணியில் பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களின் இணைப்பில் வெற்றி கண்ட புனித யோசவாஸ்
அருட்தந்தை ஆ.ஜஸ்ரின்

♣ புனித யோசவாஸ் அடிகளாரின் மறைக்கல்வி அளித்தல் முறை
திரு.கி.சாள்ஸ் பங்கிராஸ்

♣ புனித யோசவாஸ் அடிகளில் காணப்பட்ட பணித்துவ மனநிலை
அருட்சகோதரன் ச.ஜோ.சஞ்சுதன் (IVD)

♣ புனித அன்னை திரேசா
அருட்சகோதரன் அ.போல் அனக்கிளிற்

♣ Synopsis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் மிகுந்த சிறப்புமிக்கவராய் போற்றப்படுபவர் புனித யோசவாஸ். இவர் "இலங்கையின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்படுகின்றார். கிறிஸ்தவ விசுவாச விதையை இம் மண்ணில் விதைத்து, இயேசுக்கிறிஸ்துவை இம் மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர். இந் நாட்டின் தற்காலத் தலைமுறையினர் இவரைப்பற்றி நன்கு அறிந்திலர். இக் குறையைப் போக்க இலங்கையின் கத்தோலிக்க ஆயர் மன்றம் முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

புலரவிருக்கும் புதிய ஆண்டு, 2017ஐ, புனித யோசவாஸ் ஆண்டாக ஆயர் மன்றம் அறிவித்துள்ளது. இப் புனிதர் "இலங்கையின் அப்போஸ்தலர்" என்று பெருமையுடன் போற்றப்படுகின்றமையால், அவருடைய வாழ்வு, குறிப்பாக, இலங்கையின் பல இடங்களிலும் அமைந்த அவருடைய வாழ்வு, அவர் ஆற்றிய பணிகள், இப் பணிகளை ஆற்ற அவர் பயன்படுத்திய வழிமுறைகள், வாழ்விலும், பணிகளிலும் அவர் சந்தித்த சவால்கள், அனுபவித்த துயர்களும் இடர்களும் – இவை அனைத்தையும் மக்கள் அறிந்துகொள்ளும் பொழுதுதான், கிறிஸ்தவ விசுவாசிகள் புனிதருக்குத் தமது வணக்கத்தையும் மரியாதையையும் அர்த்தமுள்ள முறையில் வழங்க முடியும்.

இலங்கையின் ஆயர் மன்றத்தின் இந்த அரிய முயற்சியில், "இறையியல் கோலங்கள்" சிறப்பு மலராக உதவும் கரம் நீட்டியுள்ளமை மிகவும் பாராட்டுதற்குரியது. இவ்விதழின் ஒவ்வொரு பக்கமும் புனிதரை நமக்கு அறிமுகப்படுத்துவது சிறப்புமிக்கதாகும். புனித யோசவாஸ் இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்திய இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதத்தையும் அருளையும் நிறைவாகத்தர வேண்டுமென்று மனதார ஆசித்து, உங்களை மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

நட்புடன்,

அருட்கலாநிதி த.ஜெ.கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசவாஸ் அடிகளும் பொது நிலையினரும்

அருட்கலாநிதி ஞா.வி.பிலேந்திரன்
பேராசிரியர்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## அறிமுகவுரை

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய காலத்தில் கத்தோலிக்க திருச்சபைக்கு ஏற்பட்ட பெரும் அழிவிலிருந்து திருச்சபையைக் காத்தது மட்டுமின்றி பல்வேறு வழிகளில் அதன் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தூர நோக்குடன் சிந்தித்துப் பல பாரிய செயற் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தியவர் யோசவாஸ் அடிகள். அவரது செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கவையாக அமைந்தமைக்கு பல காரணிகளை முன்வைக்கலாம். குறிப்பாக, அவர் பொது நிலையினரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை, பொறுப்புக்களை அவர்களுடன் பகிர்ந்தமை, சீரான உறவைப் பேணியமை, அவர்களது கருத்துக்குச் செவிமடுத்துச் செயற்பட்டமை, என்பவற்றுடன் பொது நிலையினர் இவருக்கு வழங்கிய பெரும் ஆதரவும் இவரது பணியின் வெற்றிக்கு வலுச்சேர்த்தன. 'யோசவாஸ் அடிகளும் பொது நிலையினரும்' என்னும் பொருளை மையப்படுத்தியதாக இச்சிறுகட்டுரை அமைகின்றது. இன்றைய இலங்கைத் திருச்சபை, குறிப்பாகக் குருக்களும் பொதுநிலையினரும் இவரது வாழ்விலிருந்து பல பொருத்தமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம். குறிப்பாக இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் புரிந்து, ஏற்றுக்கொண்டு, அன்புறவில் இணைந்து பணியாற்றுவது திருச்சபையின் வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பை நல்கும். வாஸ் அடிகள் மூப்பு, அண்ணாவி ஆகியோரின் உதவியைப் பெற்றுச் செயற்பட்டமை பல வகையிலும் பொருத்தமான செயற்பாடாகக் காணப்பட்டது.

## மூப்பு, அண்ணாவிமாரின் பணி

வாஸ் அடிகள் 1689 முதல் 1692 வரையிலுமான காலப்பகுதியில் தனியொரு குருவாகவே இலங்கை முழுவதும் பணியாற்றினார். முதலில் யாழ்ப்பாணத்திலும் தொடர்ந்து கண்டிக்கும் சென்று, கண்டியைத் தமது பணியின் நடுநிலையமாக ஏற்படுத்தினார். அங்கிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கால் நடையாகச் சென்று மக்களைத் தரிசித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு மறை அறிவையூட்டி, துன்பங்களைத் தாங்கப் பல வகைகளிலும் ஊக்குவித்து ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினரிட மிருந்து எழுந்த கடும் சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். முதன் முதலில் ஓர் இடத்தில் பணியாற்றி, வேறு இடங்களுக்குச் செல்லும் முன்பு, அந்தக் குழுமத்து மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூப்பு, அண்ணாவி என்போரின் உதவியுடன் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார். வாஸ் அடிகள் மறையில் ஆழமான பற்றுள்ளவர்கள், விசுவாசத்தில் உறுதியுள்ளவர்கள், சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவர்களை மட்டுமே மக்களின் ஆலோசனையுடனும், ஒத்துழைப்புடனும் பொறுப்பான இப்பணிகளுக்கு ஏற்படுத்தினார். எப்போதும் மக்களின் கருத்துக்களை ஏற்று உரிய மதிப்பளித்தமை அவரது ஆழமான ஆன்மீகத்தின் வெளிபாடாகவே தென்படுகின்றது.

மூப்பர் என்பவர் சமூகத்தின் தலைவராகவும், சமய, சமூக நிகழ்வுகளை முன்நின்று நடத்துபவராகவும், பிணக்குகளின் போது நடுநிலையாளாகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) வழிபாடுகளின் போது, குறிப்பாக, ஞாயிறு தினங்களில் குரு இல்லாத இடங்களில் பூசைத்தியானம் செபிப்பது, நோயாளருக்காக வேண்டுதல் செய்வது, இறந்தோரின் அடக்கச்சடங்கை நடத்துவது, ஆலயங்களை (கொட்டில் ஆலயங்கள்) கண்காணித்தல் என்னும் நிலைகளில் பணியாற்றினார்.

செபங்களைக் கற்றுக் கொடுப்பதுடன் திருவருட்சாதனங்களுக்கு பிள்ளைகளையும் பெரியோர்களையும் தயார்ப்படுத்துவதும், மக்கள் மத்தியில் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதும் இவர்களின் கடமையாகும். குறைந்த எண்ணிக்கையிலான குருக்கள் பணியாற்றிய நிலையில் வலுவான மறைப்பணியை வாஸ் அடிகளும், தொடர்ந்து ஒறற்ரோரியன் சபைக் குருக்கள் மேற்கொள்ளவும், கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கவும் இது மிகப்பொருத்தமான பயனுள்ள முறையாயமைந்தது. மக்களும் இவர்களுக்கு மதிப்பளித்து இவர்களைத் தங்கள் தலைவர்களுக்காக ஏற்று ஒத்துழைப்பு வழங்கியமை, வாஸ் அடிகள் சூழலுக்குப் பொருத்தமான மறைபரப்பு முறையைக் கையாண்டார் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாவிமார் பணிக்கு உதவியாக இலக்கியங்கள்

மறைபரப்புப் பணியில் கத்தோலிக்க இலக்கியங்கள் பெரும் பங்களிப்பை வழங்க முடியும் என்பதில் உறுதியான கருத்தைக் கொண்டிருந்த யோசவாஸ் அடிகள், கொன்சால்வெஸ் அடிகள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்று கத்தோலிக்க இலக்கியங்களை ஆக்குவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கொன்சால்வெஸ் அடிகள் சிங்கள மொழியில் 22 நூல்களையும், தமிழில் 15 நூல்களையும் எழுதினார். இவை, அடிப்படைச் செபங்கள், கிறிஸ்தவ ஒழுக்கவிதிகள், விவிலிய வினாவிடை, கிறிஸ்தவக் கோட்பாடுகள், புனிதர் வரலாறு, பூசைத்தியானம், சுவிசேஷ விரித்துரை (ஞாயிறு வாசகங்ளுக்கான விளக்கம்) எனப்பல பொருத்தமான விடயங்களை மையப்பொருளாகக் கொண்ட நூல்களாக அமைந்திருந்தன. இவை ஒவ்வொன்றிலும் (200-300) கையெழுத்துப் பிரதிகள் செய்து அண்ணாவிமாருக்கு வழங்கியதாக அறியப்படுகின்றது. அண்ணாவிமாரின் பணிக்கு இவ்விலக்கியங்கள் பெரும் உதவியாக அமைந்திருக்குமென உறுதிபடக் கூறலாம்.

## பொதுநிலையினர் வழங்கிய ஆதரவு

யாழ்ப்பாணத்தில் இரப்போன் வேடத்தில் கத்தோலிக்கரைத் தேடியலைந்த வாஸ் அடிகள் பவுலோ தெ போரஸ் என்பவருக்குத் தம் அடையாளத்தை வெளிப்படுத்தியபோது அவர் வாஸ் அடிகளையும் ஜோணையும் யாழ்ப்பாணத்தில் தங்க வைப்பது ஆபத்தானது என உணர்ந்து மிகப் பாதுகாப்பான இடமெனக் கருதி சில்லாலைக்கு அனுப்பினார். சில்லாலை மூப்பரிடம் யோசவாஸ் அடிகளின் பாதுகாப்பு, மறைப்பணி ஆற்றுவதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்துதல், ஏனைய தேவைகளைக் கவனித்தல் ஆகிய அனைத்துப் பணிகளும் ஒப்படைக்கப்பட்ட போது, மூப்பரும் சில்லாலை மக்களும் தங்கள் உயிரைத் தியாகம் செய்தும் வாஸ் அடிகளை ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்து, பெரும் நிலப்பரப்பிற்கு அனுப்பி வைத்தனர் என்பதற்கு டொன் பேதுரு, மனுவல் டீ சில்வா என்போரின் தியாக மரணங்கள் வலுவான சான்றுகளாகும். வாஸ் அடிகளும் தாம் பணியாற்ற வந்திருப்பது புதிய இடம், ஒல்லாந்த இராணுவத்தினரின் கண்காணிப்பு நிறைந்த அரசியற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல், முன் பின் அறியாத மக்கள் குழுமம் என்பவற்றை நன்கு உணர்ந்து மூப்பரின் பணிப்பிற்கு முழுதும் ஒத்துழைப்பு வழங்கி சிறந்த மறைப்பணியை மேற்கொண்டு நுண்மதியுடன் நடந்து கொண்டார்.

## ஜோண் வழங்கிய ஆறுதலும் ஆதரவும்

இலங்கை செல்லும் திட்டத்தை தம்முடன் கோவாவிலிருந்து புறப்பட்ட குருவுக்கும், அருட்சகோதரனுக்கும் வாஸ் அடிகள் தூத்துக்குடியில் வைத்துத் தெரியப்படுத்திய போது அவர்கள் இருவரும் பயணத்திலுள்ள ஆபத்தை முன்கூட்டி உணர்ந்து மீண்டும் கோவா திரும்பினார். வாஸ் அடிகளின் குடும்பத்தில் வளர்ந்த ஜோண் மட்டும் பிரமாணிக்கமுள்ள உதவியாளனாக அவருடன் பயணத்ததைத் தொடர்ந்தார். வாஸ் அடிகளின் பயணத்துணையாளனாக மட்டுமன்றி, அவர் கடும் நோயுற்ற வேளையிலும் உடனிருந்து பராமரித்தவர், மறை பரப்புப்பணியில் பங்குகொண்டவர், என்றும் பிரமாணிக்கமாக நடந்து கொண்டவர் ஊழியன் ஜோண் என்பவராகும். வாஸ் அடிகள் தமது மறைபரப்புப் பயணங்களின் போது எல்லா இடங்களுக்கும் ஜோணையும் அழைத்துச் சென்றார். இருவருக்குமிடையே நிலவிய உறவை எஸ். ஜி. பெரேரா அடிகள், விபரிக்கும் போது ஜோணைத் தனது சொந்த சகோதரன் போல் நடத்தினார் என்றும், அவனைத்தனது சகோதரன் ஜோண் வாஸ் என அழைப்பார் என்றும், தனது குடும்பப் பெயரையே அவனுக்கு அளித்தார் என்றும் கூறுகின்றார். அன்றைய சமய, சமூக வரலாற்றுப் பின்னணியில் நோக்கும் போது ஜோண் வழங்கிய உதவியை பயணத்தோழனின் உதவி எனச்சிறிதாக எடை போட முடியாது. ஒரு பொது நிலையினன் (ஜோண்) இலங்கைத் திருச்சபைக்கு வழங்கிய தியாகமும் அர்ப்பணமும் நிறைந்த உதவியாக நோக்குதல் மிகப் பொருத்தமானது. இது இன்று வரலாற்று ஆவணங்களிலும் இடம் பெற்றுள்ளமை கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. இலங்கைத் திருச்சபை வரலாற்றிலும், குறிப்பாக இன்றும் பல ஆயிரம் பொது நிலையினர் இலைமறை காயாக நின்று ஆற்றிவரும் பாரிய பணிகள் நிறையவே இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபத்தில் அளித்த ஆதரவு

ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் கத்தோலிக்க மறையை இலங்கையிலிருந்து முற்றாக அகற்றுவதற்குப் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டிருந்தனர். அவற்றில் ஒன்றாக கத்தோலிக்க குருக்களுக்குப் புகலிடம் அளிப்பது மரணத்தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப் பின்னணியிலும் வாஸ் அடிகள் தமது மறை அறிவிப்புப் பயணங்களின் போது எங்கு சென்றாலும் அவ்விடங்களிலுள்ள மக்களுடன் அவர்களின் சிறு குடிசைகளிலேயே தங்கி, அவர்கள் வழங்கிய உணவை உண்டு அவர்களில் ஒருவராகவே பழகினார். இதனால் மக்களுக்கும் அவருக்குமிடையே உறவு ஏற்பட்டது. ஆனால், மக்கள் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் வெளியிட்டிருந்த மரணதண்டனை எச்சரிக்கையின் மத்தியிலும் வாஸ் அடிகளுக்குப் புகலிடம் அளித்தமை, மற்றும் தமக்கு ஆபத்து ஏற்படினும் குருவைத் தங்களின் இல்லங்களில் ஏற்று ஆதரித்தமை குருவின் மேல் கொண்டுள்ள கவனத்தையும் பற்றையும், மதத்தின் மேல் கொண்டுள்ள ஆர்வத்தையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

## மக்கள் காட்டிய ஆர்வத்தில் கிடைத்த ஆறுதல்

ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் விதித்திருந்த பல தடைகள், எச்சரிகைகள் மத்தியிலும் மக்கள் நடந்து கொண்ட விதம் வாஸ் அடிகளுக்குப் பெரும் ஆறுதலாக அமைந்திருக்கும். குறிப்பாக, எந்தக் குருவின் உதவியும் கிட்டாத நிலையிலும் மக்கள் தங்களாலான முயற்சிகளை மேற்கொண்டு தங்கள் விசுவாசத்தைக் காத்ததும், தாம் எதிர்கொண்ட பல ஆபத்துக்கள் மத்தியிலும் தங்கள் பிள்ளைகளுக்கு கத்தோலிக்க விசுவாசத்தை வழங்கியமையும், குருவுக்கு புகலிடம்




அளித்தமையும், ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் கடும் எச்சரிக்கை மத்தியிலும் இரகசியமாக வழிபாடுகளில் கலந்து கொண்டமையும், மக்கள் தங்கள் மத்தியில் ஒற்றுமையாக செயற்பட்டமையும், குரு மக்களிடம் கோரிக்கை விடுத்த வேளையில் ஒத்துழைப்பு வழங்கியமையும் கட்டாயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசவாஸ் அடிகளுக்குப் பெரும் ஆறுதலாயும், ஊக்குவிப்பாயும் அமைந்திருக்குமென உறுதிபடக் கூறலாம். வாஸ் அடிகளும் ஒறற்றோரியன் சபைக் குருமாரும் அளித்த ஆழமான விசுவாசத்தினால் 1707 இல் கொழும்பு மூப்பர் இம்மாவோ கொலோசோ என்பவரின் தலைமையில் கத்தோலிக்கர் தமது மனித உரிமைவேண்டி மேற்கொண்ட போராட்டம் குருக்களுக்கு பெரும் ஆறுதலை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## ஒற்றுமையும் புரிந்துணர்வும்

ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினரின் ஆட்சி நிர்வாகத்தில் வார்த்தைகளால் விபரிக்க முடியாத இன்னல்களை எதிர்கொண்ட கத்தோலிக்கர் பல ஆபத்துகள் மத்தியில் தமக்கு பணிசெய்ய வந்த குருவின் தியாகத்தை நன்கு உணர்ந்து தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கினர். யோசவாஸ் அடிகளும் மக்கள் எதிர் நோக்கிய ஆபத்துக்களை நன்கு உணர்ந்தவராய் தம்மாலான வழிகளிலெல்லாம் மக்களின் விசுவாசத்தை உறுதிப் படுத்த ஆவன செய்தார். இங்கு மக்களுக்கும் யோசவாஸ் அடிகளுக்குமிடையே (ஏனைய ஒறற்றோரியன் குருமார் உட்பட) நெருங்கிய புரிந்துணரிவும் ஒற்றுமையும் நிலவியமையை வாஸ் அடிகளின் வரலாறு பற்றி நூல்களைப் படிக்கும் போது தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு இரு பகுதியினரிடமும் விளங்கிய ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் திருச்சபை படிப்படியாக தன் நிலையை வலுப்படுத்தக் காரணமாயிற்று. திருச்சபையின் பல்வேறு அமைப்புக்களுக்கும் குறிப்பாகப் பல மட்டுப்பாடுகள் மத்தியில் செயற்படும் தலத்திருச் சபைகளுக்குச் சிறந்த ஏடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றது.



## நிறைவுரை

தாழ்த்தப்பட்டோர், உரிமையிழந்தோர், ஏழைகள், பாவிகள், வரிதண்டுவோர் எனப்பட்ட அடித்தட்டு மக்கள் சார்பாகச் செயற்படுவதென இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த தீர்மானம் அவரது வாழ்வின் முக்கிய தீர்மானமாயமைந்தது. வாஸ் அடிகளும் இலங்கை சென்று, ஒல்லாந்தர் ஆட்சியில் சொல்லணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு ஆபத்துக்கள் மத்தியிலும் உதவுவது என மேற்கொண்ட தீர்மானம் அவரது வாழ்வின் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இத்தீர்மானத்தை வாஸ் அடிகள் மேற்கொள்வதற்கு அவரது ஆழமான ஆன்மீக வாழ்வே காரணமாய மைந்தது. அவரது பணியின்போது மக்களின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கும், பல ஆபத்துக்கள் மத்தியில் இறை பராமரிப்பில் உறுதியான நம்பிக்கை கொண்டு அணைந்து கொண்டிருந்த விசுவாசத்தை மீண்டும் பெரும் சுடராக ஒளிரச்செய்வதற்கும் துணைநின்றது அவரது ஆன்மீகமே. இறைவன் ஏழையான இயேசுவில் தம்மை வெளிப்படுத்தினார். வாஸ் அடிகள் ஏழைகளில் இயேசுவைக் கண்டார். அவர்கள் மீட்புப் பணிக்கு தம் வாழ்வை அர்ப்பணித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசவாஸ் அடிகளின் தூரநோக்கு (Vision)
## (சுருக்கமான வடிவம்)

அருட்கலாநிதி ச.வி.ப. மங்களராஜா
விரிவுரையாளர்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

இலங்கையின் அப்போஸ்தலராகிய புனித யோசவாஸ் அடிகளின் காய்நகர்த்தல்கள் தூரநோக்குடன் இலங்கையில் மறைப்பணி என்ற குறிக்கோளை நோக்கியதாகவே இருந்தது. வாஸ் அடிகள் எந்த முடிவையும் ஏதேர்ச்சையாக எடுப்பவர் அல்ல. ஆழ்ந்த செபத்தில் இறைசித்தத்தை அறிய விரும்பியவராகவும், இறைவனுடைய கருவியாக, குரலாக செயற்பட்ட தமது ஆன்மீக வழிகாட்டிகளிடம் கலந்து ஆலோசித்த பின்பே கடினமான விடயங்களில் முடிவெடுப்பவராக இருந்தார். இன்று நவீன இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் 500 வருடகால வரலாற்றை பின்நோக்கிப்பார்க்கும் போது அவருடைய முடிவுதான் ஒரு தனிமனிதனால் எடுத்திருக்கக் கூடிய அதே வேளையில் ஒரு பாரிய தாக்கத்தை இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் இடைவெளியில்லாத வளர்ச்சியில் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்கலாம். இதனால் தான் இவர் இலங்கையின் அப்போஸ்தலர் என்று மிகவும் பொருத்தமாக அழைக்கப்படுகின்றார்.

இப்படியானதொரு காத்திரமான முடிவை எடுப்பதற்கு இவரது குடும்பப்பின்னணி, பெற்ற பயிற்சிகள், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு செபமனிதராக, எல்லாவற்றிலும் இறை சித்தத்தை அறிந்து செயற்படு பவராகவும், இறை சித்தத்தை மற்றவர்களின் குறிப்பாக தமது ஆன்மீக வழிகாட்டிகளின் அறிவுரைகளில் ஏற்று நடக்கும் ஒரு தாழ்ச்சியுள்ள மனிதராக, முன்வைத்த காலை பின்வைக்காதவராகச் செயற்படக் கூடியவராக இருந்தமையே காரணம். இறைவன் கொடுத்த ஆற்றல்களை – புத்தியறிவை, திடமனதை, தடைகளால் துவண்டுபோகாமல் அவற்றையே தமது அடுத்த கட்டநடவடிக்கையின் படிக்கல்லாக மாற்றக்கூடிய திறமையை, தமது பொறுப்பிலுள்ள மக்களின் தேவைகளைக் குறிப்பறிந்து செயலாற்றும் ஆற்றலை, எல்லாவற்றுக்கும் மேலாகத் தாழ்ச்சியெனும் புண்ணியத்திற்கு அதியுயர் முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டமையால் இவரால் இலங்கையில் 24 வருடங்கள் அதில் 10 வருடங்கள் தனியொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாகப்பணியாற்றிக் கத்தோலிக்க திருச்சபையை தனக்கு பின் வருபவர்களிடம் ஒரு வளர்ச்சி நிலையில் விட்டுச் செல்லக் கூடியதாயிருந்தது.

இவரது தூரநோக்குடன் கூடிய செயற்பாடுகளின் முக்கியத்துவம் அப்போது அவ்வளவு தெளிவாய் தெரியாவிடினும், தற்போது பின்நோக்கிப் பார்க்கும் போது இறைவனின் கரம் எவ்வாறு துல்லியமாகச் செயற்பட்டது என்று காணக்கூடியதாயுள்ளது. அவற்றுள் முக்கியமானவை.

## 1. கன்னடப்பிரதேசத்தில் மறைப்பணியாற்ற உடன்படல்

கன்னடாவில் கத்தோலிக்கர் ஆயனில்லா மந்தைபோல் இருந்ததைக் கண்ட உரோமை விசுவாசப்பரப்புதல் சபை தானாகவே 1637ல் கோவாவைச் சேர்ந்த மத்தியாஸ் டொ காஸ்ரோ அடிகளை அப்போஸ்தலிக்க முதல் வராக நியமித்தது. இதனை கோவா திருச்சபை அதிகாரிகள் (பத்ரோவாதோ சார்பினர்) ஏற்க மறுத்தனர். இந்த பின்னணியில்தான் கோவா திருச்சபை நிர்வாகம் வாஸ் அடிகளை கன்னடாவிற்கு அனுப்பியது வாஸ் அடிகள் தமது அயராத அரும் பணியாலும், தாழ்ச்சியாலும் தீர்க்க முடியாத இச்சிக்கலை தீர்ப்பார் என்று எவரும் எதிர்பார்த்திருக்க வில்லை.

பத்ரோவாதோ – விசுவாசப்பரப்புதல் சபை ஆட்சியுரிமை போட்டியின் மத்தியில் சிக்கிய மக்கள் குழப்பத்திலும் தமது ஆன்மீக தேவைகளை நிறைவேற்றமுடியாத நிலையிலும் இருந்த போது வாஸ் அடிகள் மிகவும் தாழ்ச்சியுடன் விளக்கம் கேட்டும் அத்துடன் மக்களின் நலத்தை முன்நிலைப்படுத்தியும் தெளிவாகவும் மனிதருக்கு கீழ்ப்படிவதை விட இறைவனுக்கு கீழ்ப்படிவதே மேல் என்றும் சுட்டிக்காட்டி எழுதிய கடிதம் கோவா திருச்சபை ஆட்சிப்பீடத்திற்குச் சினத்தை உண்டுபண்ணியது. புதிதாக வந்த பேராயர் மனுவல் டொ சொய்சா டொ மெனசேஸ் தம்மால் அனுப்பப்பட்ட குரு, விசுவாசப்பரப்புதல் சபை சார்பாக இருப்பதா என்று சினமுற்று வாஸ் அடிகளைப்பணிநீக்கம் செய்யுமளவிற்கு வந்து விட்டார். எனினும் மைசூரிலிருந்து கோவாவிற்கு பார்செலூர் வழியாகச் சென்ற ஒரு இயேசு சபைக்குரு பேராயரிடம் வாஸ் அடிகளது புனிதமான, ஆன்மீகதாகம் நிறைந்த வாழ்க்கையை தான் நேரில் கண்டமையை எடுத்துக் கூறியமையால் பேராயர் வாஸ் அடிகளுக்கெதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரச்சனைகளால் பெரும் மனஅழுத்தத்திற்குள்ளான வாஸ் அடிகள் கன்னட பிரதேசத்தை விட்டு கோவா வந்திருக்கலாம். ஆயினும் பேராயர் அவரைத் தொடர்ந்து அங்கு பணியைத் தொடருமாறு பணித்தார். இவ்வாறு அவர் அங்கு பணியைத் தொடர்ந்தமையால் இரு பிரிவினருக்கும் இடையில் (கோவா ஆட்சிப்பீடம், பத்ரோவாதோவினர் - கன்னடாவில் நியமனம் பெற்ற அப்போஸ்தலிக்க முதல்வர் பகுதி, விசுவாசப்பரப்புதல் சபையினர் ஆகியோர்) சமாதானத்தை ஏற்படுத்துபவராக இருந்தார். இதனால் கத்தோலிக்கர் பயன் பெற்றனர். அதனைத்தான் வாஸ் அடிகளாரும் எதிர்பார்த்தார். இந்த அனுபவம் வாஸ் அடிகளாருக்கு பின்நாளில் இலங்கையில் பணியாற்றிய போது உறுதுணையாயிருந்தது.

## 2. மொழி பெயர்ப்பாளராகப்பணியாற்ற உடன்படல்

வாஸ் அடிகள் இலங்கைப்பயணம் பற்றிச்சிந்தித்துக் கொண்டிருக்கையில் இன்னுமொரு விடயம் குறுக்கிட்டது. போர்த்துக்கல்லிலிருந்து இரு மடத்துறவிகள் (பிரான்சிஸ்கன் சபையினராயிருக்க வேண்டும்) கோவா வந்து இடத்துக்கிடம் சென்று மகாஞானொடுக்கம் பிரசங்கிக்கும் நோக்கத்துடன் வந்திருந்தனர். இவர்களுக்குப் போர்த்துக்கேய மொழி மட்டும் தெரிந்திருந்தது. எனவே தமது மறையுரைகளை கொங்கணி மொழியில் வழங்கக்கூடிய ஒரு துடிப்பான தாழ்ச்சியுள்ள குருவைத் தேடினர். இவர்கள் வாஸ் அடிகளைப் பற்றிக்கேள்வியுற்று அவரது உதவியை நாடிய போது வாஸ் அடிகளும் அப்பணியை இறைசித்தமாக ஏற்றுக் கொண்டு தாழ்ச்சியுடன் அவர்களுடன் பணியாற்றத் துவங்கினார். சில வருடங்களாக மறைக்கோட்ட முதல்வராக தமது பணிப்பின்கீழ் பணிபுரியும் பல குருக்களுடன் பணியாற்றிய வாஸ் அடிகள் தாழ்ச்சியுடன் ஒரு மொழிபெயர்ப்பாளராகப்பணிபுரிய இணங்கியமை அவரது தாழ்ச்சிக்கு இன்னும் அணி சேர்த்தது. இலங்கைப்பணியில் துணையாயிருந்த இன்னுமொரு முக்கிய அனுபவத்தையும் இத்தியான நாட்களில் வாஸ் அடிகள் பெற்றார். மகாஞானொடுக்க நாட்களில் சிலுவைப்பாதைத் தியானங்களையும், ஏனைய பக்தி முயற்சிகளையும் கொங்கணி மொழியில் நடத்தி மக்களை இறைவன்பால் ஈர்த்தார். இவற்றின் பயன் கண்டு இத்தியானங்கள் முழுவதையும் கொங்கணி மொழியில் எழுதினார். பின்னர் இலங்கை வந்ததும் இவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. தேக்கநிலையிலிருந்த துறவிகள் குழுமத்திற்குப் புத்துயிரளித்துத் துறவறசபையாக்குதல்

இந்த மொழிபெயர்ப்புப்பணி முடிந்ததும் இவர் எடுத்த தீர்மானம் இவரது கனவுப்பணியாகிய இலங்கைப்பணியோடு வைத்துப்பார்க்கும் போது ஒரு பொருத்தமில்லாத புதிர் ஆகத் தென்பட்டாலும் இத்தீர்மானம் தான் இலங்கையில் இவர் இறந்த பின்னரும் இவரது பணி நூறாண்டுகளுக்குமேல் தொடர்வதற்கான உத்தரவாதத்தை வழங்கியது.

அப்போது இலங்கைக்கு முக்கியமாக வேண்டியிருந்தது. அங்கு சென்று அம்மக்களின் மொழியை அல்லது மொழிகளைக்கற்று, உயிராபத்து உட்படப்பல ஆபத்துக்கள் மத்தியில் பணியாற்றக்கூடிய குருக்களைத் தொடர்ச்சியாக அனுப்புவதாகும். இதற்காக அவர் முன்னர் தொடர்பு கொண்ட குருக்கள் இந்த ஆபத்து நிறைந்த பணிக்குத் தயாராயிருக்கவில்லையென்று பார்த்தோம். ஐரோப்பிய குருக்களோ செல்ல முடியாது, ஏனெனில் அவர்களது தோலின் நிறம் அவர்களைக்காட்டிக் கொடுத்துவிடும். இந்தியக்குருக்கள் ஐரோப்பிய துறவறசபைகளில் சேர்த்துக் கொள்ளப்படாததாலும் இந்திய மறை மாவட்டக்குருக்கள் இதுபோன்ற பணிகளில் நாட்டமும், பயிற்சியும் இல்லாததால் அந்தத் தெரிவும் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இறைபராமரிப்பால் கன்னடத்தில் வாஸ் அடிகள் மறைப்போதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கோவாவில் சில சுதேச குருக்கள் ஒரு குழுமமாக இணைந்து உலகில் இருந்து ஒதுங்கி வாழ விரும்பியவர்களாக தாமே வகுத்த ஒரு நேர அட்டவணைப்படி திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட யாப்போ, ஒழுங்கோ இன்றி தமது ஆன்மீகத்தில் நிறைவுகாண முற்பட்ட வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தமை பற்றிக் கேள்வியுற்றார். இவர்களது குழுமத்தை முறைப்படியான துறவற சபையென்றும் கூறமுடியாது எனினும் இவர்கள் இப்படியான குழுமவாழ்வு வாழ்வதற்கு முன்னைய கோவா பேராயரின் அனுமதியைப் பெற்றிருந்தார்கள். இந்தக்குழுமத்தில்தான் வாஸ் அடிகள் தமது வருங்காலத் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய இறைவனுடைய கொடையைக் கண்டார். இந்தக் குழுமத்தில் மூன்று குருக்களும் ஒரு துணைத் தியாக்கோனும் மட்டுமே உறுப்பினர்கள். இந்தக் குழுவில் காணப்பட்ட 'எளிமை' தான் இவர்களை இலங்கைப் பணிநோக்கிய திசையில் திருப்பக்கூடிய ஆற்றலைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது என்பதை அப்போது வாஸ் அடிகள் இறைபராமரிப்பால் தூண்டப்பட்டு உணர்ந்து கொண்டார் எனலாம். இறைவனின் கைவன்மை இந்தச்சிறிய குழுமத்தினூடாகச் செயல்படுவதை வாஸ் அடிகள் அறிந்து அங்கிருந்து தமது அடுத்த கட்ட நடவடிக்கையைத் தொடர்ந்தார். தற்போது இந்நிகழ்வுகளைப் பின்னோக்கிப்பார்க்கும் போது இறைபராமரிப்பு எவ்வாறு அப்போதிலிருந்து வாஸ் அடிகளின் இலங்கைப்பயணத்தை முன்னகர்த்தி வந்துள்ளது என்று அறியலாம்.

புதிதாக வந்த வாஸ் அடிகள் சற்றுமுன் கன்னடத்தில் நடந்த மகாஞானொடுக்கத்தில் அவரது பங்களிப்பின் காரணத்தால்தான் பிரபல்யமாகியிருந்தார். இதனால் அவரது வருகையுடன் சபை புத்துயிர் பெற்றதெனலாம். அத்துடன் பாஸ்குவால் அடிகளின் ஆலோசனையின்படி வாஸ் அடிகளாரை அக்குழுமத்தின் தலைவராகவும் ஏற்படுத்தினார்கள். வாஸ் அடிகள் முதலில் அப்போதுதான் வந்து சேர்ந்தமையைக் காரணம் காட்டித் தயங்கினாலும் தமது தெரிவிலும் இறைவனின் கரம் செயற்படலாம் என்று ஏற்றுக்கொண்டார். வாஸ் அடிகளின் வருகை பற்றிக்கேள்வியுற்று இன்னும் இருவர் வந்து இணைய அவர்களது எண்ணிக்கை 6 ஆகியது.

சபைமுதல்வர் வாஸ் அடிகள் சபையின் பொருளாதாரத்தையும், ஆன்மீகத்தையும் ஒரு ஸ்திர நிலைக்குக் கொண்டு வந்தார். நிதிப் பற்றாக்குறை, கோவா திருச்சபை ஆட்சிப்பீடத்தின் ஆதரவின்மை மத்தியிலும் ஒரளவுக்கு அக்கட்டிடத்தைத் திருத்தியமைத்தார். ஆன்மீகப் பயிற்சிகளை அதிகரித்து, ஏழைகளுக்குதவும் பணிகளையும் அதிகரித்தார். இந்த ஏழைகளுக்குதவும் பணியில் அவர் எவ்வளவு நாட்டம் கொண்டிருந்தாரெனில் பிற்காலத்தில் இலங்கையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் எழுதும் கடிதங்களில் இந்த ஏழைகள் தமது சபைத்துறவிகளை நற்செயல்கள் செய்யத்தூண்டியமையால் அவர்களுடைய செபத்திற்கு விசேட மகிமை உண்டு. எனவே அவர்களைத் தமது பணிகளுக்காக மன்றாடக் கேட்கச் சொல்லி எழுதினார். துறவிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களுக்குச்சென்று மகாஞானொடுக்கம் போதிக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. வெளியே செல்ல முடியாதிருந்த துறவிகள் அங்கேயே இருந்தவண்ணம் வருகிறவர்களின் பாவசங்கீர்த்தனம் கேட்கும் பணியிலும், மற்றத் திருவருட்சாதனங்கள் வழங்கும் பணியிலும் ஈடுபட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தென்திசைநோக்கிய மறைப்பணிப் பயணக்குழுவில் ஜோனையும் இணைத்துச்செல்லல்

வாஸ் அடிகளாரைப் பொறுத்தவரையில் அவருக்குத்திரும்பி வரும் நோக்கம் இல்லாததால் இரகசியமாக பாஸ்குவால் அடிகளாரிடம் தலைமைப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வழமை போன்ற ஒரு மறைப்போதனைப் பயணத்திற்குச் செல்வது போல இறுதியில் வந்து சேர்ந்த சபை உறுப்பினர்கள் பவுல் டி சூசா (Paul de Souza) அடிகளையும் ஸ்ரீபன் சிகுவெய்ரா (Stephen Siqueira) எனும் அருட்சகோதரரையும் வழமைக்கு மாறாக ஜோண் எனும் சங்குவாலியில் அவரது குடும்பத்தினருடன் வாழ்ந்து வளர்ந்துவந்த மிகவும் நம்பிக்கைக்குரியவருமான பணியாளனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். இந்தப்பயணமும் ஒரு வழமையான மறைப்பணிப்பயணம் போலவே இருப்பதாகக் காண்பிப்பதற்காக கன்னடத்தில் முன்னர் பணிசெய்த கிராமங்களைச் சந்தித்தவராகப் பயணத்தை மேற்கொண்டார். அவ்வேளையில் திருவருட் சாதனங்களை நிறைவேற்றியவண்ணம், தேவைப்படும் இடங்களில் மறையுரையாற்றிய வாறு, சந்திக்க வேண்டிய தேவையுள்ள வீடுகளையும் சந்தித்து, மற்ற மறைப்பணியாளரையும் இப்பணிகளில் ஈடுபடுத்தியவண்ணம் பயணமானார். இப்படியான பணிகளில் வாஸ் அடிகள் ஏறக்குறைய 9 மாதங்கள் பணியாற்றியமையால் எவருக்கும் அவர் இலங்கை செல்வதற்கிருக்கிறார் என்ற உண்மை மறைவாகவேயிருந்தது.

1687ம் ஆண்டு தெற்கே மலபாரில் தெல்லிச்சேரிக்கு வந்த போதுதான் தனது இரு உடன் மறைப்பணியாளர்களுக்கும் உண்மையைச் சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்து அவர்களிடம் தமது உத்தேச இலங்கைப்பயணம் பற்றியுரைத்தார். அவர்கள் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இருவரும் ஒரு மனத்தவராக கத்தோலிக்க மதவிரோதிகளாயிருந்த ஒல்லாந்தருடைய ஆட்சிப்பகுதியாகிய இலங்கைக்குச் செல்வதில் உள்ள கடும் ஆபத்தை உணர்ந்தவர்களாக வாஸ் அடிகள் தனித்து விடப்பட்டாலும் பரவாயில்லையென்றுவிட்டு கோவாவுக்கே திரும்பினர். இப்படியானதொரு நிலைமை ஏற்படலாம் என்று உணர்ந்தவராகவே ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமது குடும்பத்தவர்க்கும், தமக்கும் பிரமாணிக்கமும், பணிவும் உள்ள ஜோணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வந்திருந்தார். முன்னர் முதல்முறை தமது இலங்கைப்பயணம் பற்றி மற்றக்குருக்களோடு பேசியபோது அவர்கள் அதனை ஒரு முட்டாள்தனமான தீர்மானமென்று தள்ளிவைத்தமையை நாம் முன்னர் பார்த்தோம். எனவே இப்படியானதொரு நிலைமை ஏற்படலாம் என்று வாஸ் அடிகள் பயந்தமை நியாயமானது தான்.

## 5. தமிழ் மொழியைக்கற்றல்

வாஸ் அடிகளும் ஜோணும் கொச்சின் சென்று பின் குயிலோன் ஊடாக திருவாங்கூரிலுள்ள தோப்பு எனுமிடத்திற்கு வந்தனர். அங்கு யேசு சபையினரின் மையம் ஒன்று (College) இருந்தது. யேசு சபையினர் இலங்கையுட்பட பல்வேறு இடங்களில் பணிபுரிந்தவர்கள், பணிபுரிந்து கொண்டிருப்பவர்கள். அவர்களிடமிருந்து கிடைத்த வரவேற்பினால் மகிழ்ந்த வாஸ் அடிகள் தமது இலங்கைப்பணித்திட்டத்தை விளக்கினார். யேசு சபைக்குருக்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கல்பிட்டி ஆகிய தமிழ்ப்பகுதிகளில் பணியாற்றியவர்கள். எனவே தமிழில் நல்ல பரிச்சயம் பெறவேண்டுமென அவர்கள் அறிவுறுத்தியபடியே வாஸ் அடிகள் தமிழைக்கற்றார். எனவே மன்னாரில் போய் இறக்குவதற்கு முன்னதாக மொழி பெயர்ப்பாளரது உதவியின்றி தமிழர்களோடு உரையாடுமளவுக்குத் தமிழில் உரையாடக்கற்றுக் கொண்டார்.

## 6. யாழ்ப்பாணத்தில் பணிதுவங்கமுன் நோய்வாய்ப்படல்

கடைசி சில நாட்களாக வாஸ் அடிகளும் ஜோணும் அனுபவித்த உடல் உபாதைகள், உறக்கமின்மை, போதிய உணவின்மை, வீட்டுக்கு வீடு பிச்சையெடுத்தமையால் கிடைத்த பல்வேறு உணவு வகைகள் (அவற்றுள் பழுதானவையும் இருந்திருக்கலாம்), ஒவ்வாத உணவு வகைகள் ஆகியவற்றை உண்டமை எல்லாம் சேர்த்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பின் அவரை கடும் வயிற்றுப்போக்கு நோய்க்குள்ளாக்கியது. இந்நோய் அந்நாட்களில் ஒரு பயங்கரமான உயிர்கொல்லி நோயாகக்கருதப்பட்டது. அத்துடன் தொற்றுநோயாகவும் கருதப்பட்டது. வாஸ் அடிகள் இந்நோயால் படுக்கையாய் கிடந்தார். மண்டபச்சொந்தக்காரர் ஒரு வேளை விரும்பியிருந் தாலும் அயலவருடைய அழுத்தத்துக்குப்பயந்து நோயுற்ற வாஸ் அடிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடை போன்ற ஒரு படுக்கையில் வைத்துக் கொண்டுபோய் ஊருக்கு வெளியே ஒரு தனியிடத்தில் கிடத்திவிட்டு வந்துவிட்டார். சில நாட்கள் ஜோண் தமது குருவைப் பராமரித்து வந்தார். ஆயினும் விரைவில் அவரும் அதே நோய்க்காளாகி அருகிலேயே படுக்க வேண்டியதாயிற்று. அவ்வேளையில்தான் இரக்கமுள்ள ஒரு பெண், நாதியற்ற இருவருக்கும் தினமும் கொஞ்சம் கஞ்சி கொடுத்து வர இருவரும் படிப்படியாகக் குணமாயினர்.

இந்த அனுபவம் வாஸ் அடிகளுக்கு இறைபராமரிப்பினால் கிடைத்த இறை அனுபவம் என்றுதான் சொல்லவேண்டும். இவ்வனுபவம் இவரது வருங்கால மறைப்பணியை வினைத்திறனுள்ளதாக ஆக்குவதில் முக்கிய பங்கு வகுத்தது. கண்டியில் சில வருடங்களின் பின் ஏற்பட்ட அம்மையெனும் கொள்ளைநோயின் போது எல்லோரும், குடும்பத்தவர் உட்பட ஓடிப்போனபோது நோயாளிகளைப்பராமரித்து, இறந்தோரை அடக்கம் செய்ய அதன் வழியாக மக்களினதும் கண்டியரசனதும் நன்மதிப்பைப்பெற உதவியது.

## 7. கண்டியில் சிறை வாழ்வால் கிடைத்த நன்மைகள் – கோவா திரும்புவதிலிருந்து தடுக்கப்படல், சிங்களம் கற்றல்

வாஸ் அடிகள் சிறையில் இருந்தபோது 1693ம் ஆண்டு கோவாவில் அவரது சபை முதல்வரிடமிருந்து திரும்பிவரும்படி கடிதம் ஒன்று வந்தது. ஆனால் அவர் அவ்வேளையில் சிறையில் இருந்தமை வருங்கால இலங்கைத்திருச்சபையின் நலனுக்காக இறைபராமரிப்பின் ஏற்பாடு என்றுதான் சொல்ல வேண்டும். சிறையில் இல்லாதிருந்திருந்தால் கீழ்ப்படிதலுள்ள ஒரு துறவியாக சபைமுதல்வரது பணிப்புரைக்கு அமைந்து கோவா திரும்பியிருப்பார். இவ்வாறு அவர் கோவா சென்றிருந்தால் சபைமுதல்வர் அவர் திரும்பவும் இலங்கை வர அனுமதித்திருப்பாரா? வாஸ் அடிகள் வராது விட்டிருந்தால் அவரது பணியை அவர் விட்ட இடத்திலிருந்து அவர் செய்தது போல வேறு யாராவது முன்னெடுத் திருப்பார்களா? போன்ற பல கேள்விகள் எழுகின்றன. எனவே ஒருவிதத்தில் வாஸ் அடிகள் இச்சிறையில் வலியச்சென்று அடைபடாவிட்டாலும் இலங்கைத்திருச்சபையின் வளர்ச்சியில் இச்சிறைவாழ்வு ஒரு இறைவனின் பராமரிப்பு என்று தான் கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ் அடிகள் கண்டிக்கு வந்தபோது மனச்சாட்சியில்லாத சந்தர்ப்பவாதியாகிய பிரெஞ்சு நாட்டு டெலா நெரோல் (Dela Nerolle), வாஸ் அடிகளை ஒரு உளவாளியாக கண்டி மன்னரிடம் முறையிட்டதால் வாஸ் அடிகளும், ஜோணும் சில நாட்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டியேற்பட்டது. ஆயினும் படிப்படியாக அவர் குற்றமற்றவர் மட்டுமல்ல, எதுவுமறியாத ஒரு எளிய துறவி என்பது தெளிவானதும் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். எனினும் அரசனின் கண்காணிப்பிலிருந்து விடுவிக்கப்படவில்லை. கண்டியில் வாழ்ந்துவந்த கத்தோலிக்கருடன் தொடர்பு ஏற்படுத்த முடியாத நிலையிலிருந்த வாஸ் அடிகள் கண்டியில் மட்டுமல்ல மற்ற இடங்களிலும் உள்ள கத்தோலிக்கருடனும் மற்றவர் களுடனும் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய காலம் வரும், அப்போது தமக்கு சிங்கள மொழியில் போதியளவு அறிவு இருக்கவேண்டும் என்று எண்ணியவராகக் காலத்தை வீணடிக்காமல் சிங்களத்தைக் கற்றார். அத்துடன் சிங்களத்தில் ஒரு சொற்றொகுதி பட்டியலையும் (Vocabulary) தயாரித்தார். இதனை ஒரு சிறிய அகராதியாகவும்(Dictionary) விரிவு படுத்தினார். இது பின்னர் வந்த ஒரட்டோரியன் சபைக்குருக்கள் சிங்களம் கற்க உறுதுணையாகவிருந்தது.

## 8. ஜோணுக்கு இலத்தீன் கற்பித்தல்

வாஸ் அடிகளின் இலங்கை நோக்கிய பயணத்திலும் இலங்கையில் பணி வாழ்விலும் அவரது பிரமாணிக்கமுள்ள பணியாளர் ஜோணுடைய பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஜோண் விடயத்திலும் வாஸ் அடிகள் தூரநோக்குடன் செயற்பட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஜோணுடைய பங்களிப்புக்களைப் பார்க்கும் போது அவருடன் தெற்கு நோக்கிப் பயணித்த இரண்டு அவரது உடன் சபையினரும் இலங்கைப் பயணத்தில் தமக்குடன் பாடில்லையென்று விலகியது போல ஜோணும் சஞ்சலப்பட்டு விலகியிருந்தால் அவரது இலங்கைப் பயணத்திற்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. சிலவேளை பயணம் சற்றுக் காலம் தாழ்த்தி இருக்கலாம். ஜோணுக்கு வாஸ் அடிகளின் செயற்பாடுகளில் முழு நம்பிக்கை இருந்தது. எனவே அவர் வாஸ் அடிகளை விட்டு விலகவில்லை. யாழ்ப்பாணத்தில் வாஸ் அடிகள் நோயுற்றுப் படுக்கையில் விழுந்தபோது அவரை அன்போடும் அக்கறையோடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரித்தார். பின்னர் குணம் பெற்று சில்லாலை சென்று அங்கிருந்து குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட போதும் ஜோண் கூடவேயிருந்து பயணித்தார். பின்னர் புத்தளம், கண்டி என்று அவரது பணி விரிவடைந்த போதும் உடனிருந்தார். எனவே வாஸ் அடிகளின் செபவாழ்வு மட்டுமல்ல மறையுரைகள், மறைக்கல்வி வகுப்புக்கள் எல்லாவற்றிலும் மிகவும் பரிட்சயமானவராக அவர் உருவாகியிருப்பார். அவருக்கு ஒன்று குறைவாக இருந்ததை வாஸ் அடிகள் உணர்ந்தார். அதுதான் பிரமாணிக்கமாகச் சொல்லிவந்த கட்டளைச் செபம் (Office) இலத்தீனில் இருந்தமையால் அவ்வேளைகளில் ஜோண் வெறும் பார்வையாளராக மட்டும் இருந்திருப்பார். எனவே அந்தக் குறையையும் போக்கக் கிடைத்த வாய்ப்புத்தான் அவர் கண்டியில் அரசனின் கைதியாகவும், பின்னர் கண்காணிப்பிலும் இருந்த காலம். எனவே அந்நேரத்தில் ஜோணுக்கு இலத்தீனைக் கற்பித்தார். ஜோணுக்கு இலத்தீன் கற்பிப்பது மிகவும் சிரமமான விடயமாக இருக்கவில்லை என்பதையும் வாஸ் அடிகள் உணர்ந்தார். எனவே ஜோணும் தன்னைப் போல ஒரு மறைப்பணியாளராக ஏன் வர முடியாது என வாஸ் அடிகள் எண்ணியிருக்கலாம். எனினும் வாஸ் அடிகள் ஜோணைத் துறவியாக வர வற்புறுத்த விரும்பவில்லை.

## 9. வாஸ் அடிகள் ஆயராவதை விரும்பவில்லை – ஏன்?

வாஸ் அடிகளின் பணியின் சிறப்பு வெளியே கசியத் தொடங்கியது. இலங்கைத் திருச்சபை மீது முறைப்படியான ஆட்சியதிகாரம் கொண்ட கொச்சின் ஆயர் 1696ம் ஆண்டு வாஸ் அடிகளாரைத் தமக்குள்ள எல்லா அதிகாரங்களையும் கொண்ட குரு முதல்வராக நியமித்தார். இலங்கை வாழ் கத்தோலிக்கரை எந்த ஆயரும் தரிசிக்க முடியாதிருந்ததால் அவர்களுடைய நலனுக்காக வாஸ் அடிகள் குருமுதல்வராக இருந்து பணியாற்ற உடன்பட்டார்.

1703ம் ஆண்டு பாப்பரசர் 11ம் கிளெமென்ற் (1700 - 1721) இந்தியா. சீனாவில் சில சர்ச்சைக்குரிய மறைபோதக முறைகள் பற்றி விசாரித்து அறிக்கை தரும்படி பேராயர் சார்ள்ஸ் மெய்லார்ட் டி டூர்நோன் (Charles Mailard de Tournon) (பின்னர் இவர் கருதினால் ஆனார்) அவர்களை அனுப்பிவைத்தார். அதே வேளையில் வாஸ் அடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஆற்றி வரும் அரும்பணி பற்றிய தகவல்கள் பாப்பரசருக்கு எட்டியதால் அது பற்றியும் தகவல் பெற்றுத் தரும்படி பாப்பரசர் கேட்டிருந்தார். இந்தப் பாப்பரசருக்கு இலங்கை பற்றிய விசேட அக்கறை யிருந்தது, ஏனெனில் முன்னர் இருந்த திருத்தந்தை X1ம் சாந்தப்பர் (Pope Innocent, XI) (1676 - 1689) ஐரோப்பிய குருக்களை இலங்கைக்கு அனுப்ப மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்த போது பாப்பரசர் 11ம் கிளமென்ற் எப்படியாவது இலங்கைக்குக் குருக்களை அனுப்ப வேண்டு மென முயன்று கொண்டிருந்தவர். தற்போது பேராயர் டி டூர்நோன் 1703ம் ஆண்டு நவம்பரில் பாண்டிச்சேரி வந்த போது வாஸ் அடிகளாருக்கு அவரதும் அவரது சக குருக்களின் பணிகளைப் பாராட்டியும் இன்னும் கூடுதல் தகவல்களைக் கேட்டும் எழுதினார். கடிதத்துடன் வாஸ் அடிகளாருக்கு பரிபூரண பலன் கொண்ட ஒரு திருச்சிலுவையையும் அன்பளிப்பாக அனுப்பியிருந்தார். அத்துடன் வாஸ் அடிகளாரை ஆயராக ஏற்படுத்தி இலங்கையின் அப்போஸ்தலிக்க முதல்வராக நியமிக்கவும், வாஸ் அடிகள் அதற்கு உடன்படாதவிடத்து அவர் குறிப்பிடும் குரு ஒருவரை ஆயராக நியமனம் செய்ய தயாராக இருப்பதாகவும் செய்தியனுப்பினார். வாஸ் அடிகள் 1706ம் ஆண்டு ஜீலை 29ல் பேராயருக்கு இலங்கை மறைத்தளம் பற்றிய தகவல்களை அனுப்பினார். ஆனால் ஆயர் நியமனம் பற்றிக் குறிப்பிடுவதை கவனமாக தவிர்த்திருந்தார். அதற்குரிய வலுவான தூரநோக்குடன் கூடிய காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் வாஸ் அடிகளார் எப்போதும் கடைப்பிடித்து வந்த தாழ்ச்சியாகும். அப்படியாயின் ஏன் வாஸ் அடிகள் வேறு ஒரு குருவின் பெயரைப் பரிந்துரைக்கவில்லை என்ற கேள்வி எழலாம். அதற்கு இருக்கும் காரணம் தான் இங்கு முக்கியமானது.

இலங்கை வாழ் கத்தோலிக்கர் மீது வாஸ் அடிகள் கொண்டிருந்த அன்பும் அக்கறையும் தான் இதன் காரணம். தான் அல்லது தான் பரிந்துரைக்கும் குரு ஆயர் பதவியை ஏற்றால் விசுவாசப்பரப்புதல் சபை - பத்ரோவாதோவினர் மோதல் மீண்டும் இலங்கை விடயத்தில் வெடிக்கும் என்றும் அதனால் பத்ரோவாதோவின் அனுசரனையுடன் செயற்படும் கோவா ஒரட்டோரியன் சபையினர் இலங்கைக்கு வருவதற்கான கதவுகள் அடைக்கப்படும் என்றும் விசுவாசப்பரப்புதல் சபை ஐரோப்பிய மறைபணியாளரை அனுப்ப விரும்பினாலும் அது நடவாத காரியம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதனால் பாதிக்கப்படுவது இலங்கைத் திருச்சபையும் கத்தோலிக்க மக்களுமேயென்று வாஸ் அடிகள் நன்கே உணர்ந்திருந்தார். வாஸ் அடிகள் பிறக்குமுன் நடந்த நிகழ்வு (1637ம் ஆண்டு பீஜாப்பூர் அப்போஸ்தலிக்க முதல்வர் நியமனம்) மட்டுமன்றி பின்னர் 1674ம் ஆண்டு விசுவாசப்பரப்புதல் சபையினால் தோமஸ் டி காஸ்ட்ரோ (Thomas de Castro) எனும் கோவாவைச் சேர்ந்த குரு தெற்கு கன்னடத்திற்கு அப்போஸ்தலிக்க முதல்வராக ஏற்படுத்தப்பட்டபோது வாஸ் அடிகள் 1681ல் இருந்து 1684 வரை கோவா ஆட்சிப்பீடத்தில் பத்ரோவா தோவினரால் அங்கு கோட்ட முதல்வராக (Vicar Forane)அனுப்பப்பட்ட போது ஏற்பட்ட பிரச்சினைகள், நிர்வாகச்சிக்கல்கள் எல்லாவற்றையும் நேரடியாக அனுபவித்திருந்தார், அவற்றால் பாதிக்கப்பட்டுமிருந்தார். அங்கு ஒரு பிரிவினை ஏற்படுவதையும் வாஸ் அடிகள் தமது தாழ்ச்சி நிறைந்த செயற்பாடுகளால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தவிர்த்திருந்தார். அது போன்ற நிலை இலங்கையில் ஏற்பட்டால் அதனால் இலங்கைக் கத்தோலிக்கர் பாதிக்கப்படுவதை அவர் விரும்பவில்லை.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது வாஸ் அடிகள் ஆயராவதை விரும்பாததும், இன்னுமொரு குருவைப் பரிந்துரைக்காமல் இருந்தமையும் எவ்வளவு தூரநோக்குடனும், புத்திசாலித்தனத்துடனும் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தாழ்ச்சியுடன் மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவு என்பது புலனாகும்.

இதனால் தான் வாஸ் அடிகளாரது படங்களிலும் 1987ம் ஆண்டு அவர் இலங்கைக்கு வந்ததன் 300வது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட தபால் முத்திரையிலும் ஆயருக்குரிய செங்கோலும், தலைச்சீராயும் அவர் உருவப்படத்திற்கருகே உள்ளமையைப்பார்க்கலாம். ஆனால் அவர் அவற்றை அணியவுமில்லை கையில் வைத்திருக்கவுமில்லை. (Don Peter. W. L.A. Historical Gleanings, Colombo, 1992, pp. 90-94; Perniola.V., The Catholic Church in Sri Lanka, The Portuguese Period, Vol.III, 1620-1658 (2nd ed.) Tisara Press, 2003 doc. 205, p.454)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளின் தெரிவும் பணியும்

யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் ஆற்றல்களை இனம் கண்டு வாஸ் அடிகள் ஊக்குவித்ததன் பயனாக அவர் தமிழ், சிங்கள கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தையென்று போற்றப்படுகின்றார். இவர் 1705ம் ஆண்டு இலங்கை வந்து 1741ல் இறக்கும் வரை அரும் பணியாற்றினார். யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாருக்கு தமிழ் நன்கு தெரிந்திருந்தமையால் அவரைக் கண்டிக்கு அழைத்துச் சென்று சிங்களத்திலும் பாண்டித்தியம் பெறவைத்து இலங்கைக்குத் தேவையான கத்தோலிக்க இலக்கியத்தை அவரைக் கொண்டு உருவாக்க வாஸ் அடிகள் விரும்பினார். மக்களுக்கு மறையறிவை ஊட்டத் தேவையான நூல்களை உருவாக்கக்கூடிய குருவாக இவரை வாஸ் அடிகள் இனம் கண்டார். அவரது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. தமிழிலும் சிங்களத்திலும் செபப்புத்தகங்களும், மறைக்கல்வி நூல்களும் தேவையாயிருந்தன. வாஸ் அடிகள் ஏற்கெனவே சில நூல்களை மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்திருந்தார் என்று முன்னர் பார்த்தோம். இவற்றை மேன்மைப்படுத்தவும் புதியவற்றை உருவாக்கவும் வேண்டிய தேவையிருந்தது. இங்கும் வாஸ் அடிகள் தாழ்ச்சியுடன் பின்னணியில் இருந்தவண்ணம் கொன்சால்வெஸ் அடிகளை இயக்கித்தரமான நூல்களைப் படைக்க உதவினார் இவர் எழுதிய தமிழ் நூல்கள் சில:

- கிறிஸ்தியானி ஆலயம், தேவ அருள்வேத புராணம், இதன் சுருக்கம், சுவிசேஷ விரித்துரை, வியாகுல பிரசங்கம், தர்ம உத்தியானம், அற்புத வரலாறு, ஞான உணர்ச்சி, சுகிர்த தர்ப்பணம், வாத்தியாரும் குடியானவனும் தர்க்கம், நவ தர்க்கம், முசல்மான் வேதம், கடவுள் நிர்ணயம், நாலுவேதம், நற்செய்தி விளக்கவுரையும், புனித திருச்சபை வரலாற்றையும் புரிந்து கொள்ள உதவும் அகராதி.

இவரது வியாகுல பிரசங்கம் இன்றும் தவக்காலத்தில் பாவனையிலுள்ளது. மற்றும் இவரது செபங்கள் வளர்சியடைந்த நிலையில் இன்றும் மோட்ச பாதை போன்ற தற்போது பாவனையிலுள்ள செபப்புத்தகங்களில் உள்ளதைக் காணலாம்.

(Perniola. V. The Catholic Church in Sri Lanka. The Dutch Period, Vol.II, 1712-1746, Tisara Press, Dehiwala 1983, doc. 91, pp. 321-356)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற் செய்திப் பணியில் பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களின் இணைப்பில் வெற்றி கண்ட புனித யோசவாஸ் அடிகள்

அருட்தந்தை ஆ.ஜஸ்ரின்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

கிறிஸ்தவ விசுவாசிகள் பல்வேறு வரங்களைப் பெற்றுள்ளதால் ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கும் வாய்ப்பிற்கும் தம் திறமைக்கும், அருட்கொடைக்கும், பணிக்கும் தக்கவாறு நற்செய்திப்பணியில் ஒத்துழைக்க வேண்டும். ஆகவே, விதைப்போர், அறுவடை செய்வோர், நடுவோர், நீர்பாச்சுவோர் அனைவரும் ஒன்றித்து இருக்க வேண்டும். இங்கனம் 'ஒரே குறிக்கோளை அடையத் தனித்துரிமையும் ஒழுங்குடனும் ஒன்றாக உழைத்து அவர்கள் திருச்சபையின் வளர்ச்சிக்குத் தங்கள் ஆற்றல்களை எல்லாம் செலவிடுவர்.' சங்க ஏடுகள் 'மறை அறிவிப்புப்பணி' 5 இல.28.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நற்செய்திப்பணியில் இடம் பெறவேண்டிய நற்செய்திப்பணியாளரின் தனிப்பட்ட வரங்கள், திறமைகள் குறித்துத்தெளிவாகக் கூறுகின்றது. இதன் பின்னணியில் இக்கூற்றிற்கு இலக்கணமாக ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்து காட்டிய இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவாஸ் அடிகளின் வாழ்வில் துலங்கிய சிறந்த பண்புகளில் சிலவற்றையும் அதனால் நற்செய்திப்பணிக்குக் கிடைத்த பெரும் வெற்றியைக் குறித்தும் இக்கட்டுரையில் சிறு பதிவினை மேற்கொண்டு அதனூடாக இவரது வாழ்க்கையை வெளிக்கொணர முயல்கின்றேன்.

## கீழைத்தேய கலாச்சார, பண்பாட்டுப் பின்னணியில் ஆர்வம்

புனித யோசவாஸ் இந்தியாவில் கோவாவில் பிறந்தாலும் போத்துக்கீச கலாச்சாரம், மொழிப்பின்னணியில் வளர்ந்தார். இருப்பினும் இறை பணியின் நிமித்தம் இவர் தமது அடிப்படைத் தேர்வுகளில் மாற்றம் கொண்டு வந்தார். எனவே இவர் தனது இந்திய (கீழைத்தேய) அடையாளத்தை கைவிட்டுவிடவில்லை. ஓர் பிராமணக் குடும்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததால் இந்தியராகவே இருந்து இந்தியர்களது அல்லது இலங்கை புகுந்த வேளையில் இலங்கையரது, இலங்கை மன்னர்களது மனங்களை அறியவும், வெல்லக் கூடியதுமான நிலையில் இருந்தார். இப் பிறப்புடன் கூடிய வளர்ச்சியின் அடையாளம் இவரது பணித்தெரிவில் மிக முக்கிய இடத்தினைப்பெற்றதைக் காணலாம்.

இதனாலே கீழைத்தேய ஆன்மீகத்தில், கலாச்சாரத்தில் வேரூன்றிய (பௌத்த, இந்து) இலங்கையில், அந்நாட்டு மக்கள் எவற்றை உயர்வாகக்கருதினார்களோ (கலை, மொழி, கீழைத்தேய ஆன்மீக நெறிமுறைகள், கலாச்சாரம்) அவற்றினூடாக, அவற்றை உணர்ந்து உள்வாங்கி கைக்கொண்டு கடும் தவ வாழ்வின் மூலம் மறைபரப்பும் பணியை சிறப்பாகச் செய்தார். கிறீஸ்தவ மறைபணியாளர்களும் கீழைத்தேய ஆன்மீக நெறிகளுக்கு குறைவானவர்கள் இல்லை என்பதை தனது ஏழ்மையான, தரித்திர தவ வாழ்வின் மூலம் எடுத்துக்காட்டினார். இதன் காரணமாக இவர் தனது பணிகளுக்கு பணத்தை மட்டும் மையமாக வைத்து பணிபுரியவில்லை. அத்தோடு தனது சபைக் குருக்களையும் இந்நிலைகளில் வளர, பணி செய்ய ஊக்குவித்ததையும் காணலாம்.

மேலைத்தேய, குறிப்பாக ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் எப்போதும் தமது மேலைத்தேய கலாச்சாரத்தையே மிகவும் உயர்ந்ததாகக் கருதினர். இதன் பொருட்டு அவர்கள் கீழைத்தேய கலாச்சாரத்தோடும், மக்களோடும் பெரிதாக தம்மை இணைத்துக் கொள்ளவில்லை, அல்லது இது அவர்களால் இயலாது போயிற்று மாறாக யோசவாஸ் அடிகள் இவ்வாறான மேலைத்தேய கலாச்சாரப் பின்னணியில் கோவாவில் வளர்ந்தாலும் மேற்கத்தேய உயர் மனநிலையில் தனது பணியை முடக்கி விடவில்லை. மாறாக மக்களின் கலாச்சாரத்தையே இலங்கையில் பணியாற்றிய போது கைக்கொண்டார். இதனால் உணவு முறைகளில் சோறு, கஞ்சி என்பவற்றை உண்டு, வாழ்க்கை முறையில் சாதாரண மக்களைப் போலவே பாயில், நிலத்தில் படுத்துறங்கினார். நீண்ட பயணங்களின் போது வெறுங்காலுடன் பயணித்து மக்களில் ஒருவராக தம்மை மாற்றிக்கொண்டார்.

சிறப்பாக இவர் மக்களின் உடைகளையோ, பழக்க வழக்கங் களையோ புறந்தள்ளவில்லை. மற்றும் பரம்பரைப்பெயர்களை மாற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று இவர் கேட்டுக் கொண்டதே இல்லை. ஏனெனில் போத்துக்கீச காலத்தில் பரம்பரைப்பெயர்கள் மாற்றவேண்டிய கட்டாயம் இருந்தது. யோசவாஸ் அடிகள் எப்போதும் இலங்கையின் அரசர்களை மதித்து, மரியாதை செலுத்தி கண்ணியமுடனும் கௌரவத்துடனும் நடந்தார். போர்த்துக்கீச துறவிகள் இலங்கையில் பணியாற்றிய போது இலங்கை மன்னர்களை அல்ல போத்துக்கீச மன்னனையே மதித்து, ஏற்று நடந்தார்கள். ஆனால் இவர் தன் பணி வாழ்வின் உத்திகளால் அரசர்களிடம் நன்மதிப்பைப்பெற்று தமது பணிகளை செவ்வனே நிறைவேற்றினார்.

ஒரு நாட்டின் மொழியானது மக்களின் பொதுத்தொடர்பாடலுக்கு மட்டுமல்ல அதன் சமூக, கலாச்சார மேன்மையைப்பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கின்றது என்பதையும் சுதேச மொழியானது சொந்த சொந்த கலாச்சாரத்தோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என்பதையும் அறிந்து யோசவாஸ் முனிவர் தமது கிறிஸ்தவப் போதனைகளும், கோட்பாடுகளும் மக்களுக்கு முறையே கொடுக்கப்பட்டு உள்வாங்கப்பட வேண்டும் என்றால் சுதேச மொழி அவசியம் என்று தீர்மானித்து அதற்கேற்ப செயலாற்றினார். இதனால் இவர் தனது சொந்த மொழியுடன், கண்டியில் சிறையில் இருந்த காலத்தில் கண்டி மக்களின் மொழியைக் (சிங்களம்) கற்கத் தொடங்கினார். தனது சபைக்குருக்களில் சிலரைக்கண்டியில் பௌத்த பிக்குமாரிடம் சிங்களம் கற்க அனுப்பினார் என்றும் காணக் கிடக்கின்றது. இதுபோலவே தமிழ் பிரதேசங்களில் பணியாற்றிய போது தமிழையும் நன்றாகக்கற்றுத் தேர்ந்து சாதாரண மக்களின் திருவழிபாட்டிலும் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. வழிபாட்டுத் தேவைகளில் மக்கள் மனம் கவரக்கூடிய வகையில் சுதேச மொழிகளை மையப்படுத்தியது இவரது பண்பாட்டியல் பின் சிறந்த விடையமாகும்.

## இயற்கையின் மீது அன்பு

பலரும் அறியாத விடயங்களில் ஒன்று யாதெனில் புனித யோசவாஸ் அடிகள் புனித பிரான்சிஸ் அசிசியாரின் 3ம் சபையின் அங்கத்தவராக இருந்தார் என்பதாகும். இதனால் புனித அசிசியாரின் ஆன்மீகம் வெகுவாக இவரையும் இவரது பணிமுறைகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொண்டது என்று அனுமானிப்பது தவறாகாது. ஏனெனில் புனித பிரான்சிஸ் அசிசியார் எவ்வாறு இயற்கையை ஏற்று, மதித்து, அன்பு காட்டினார் என்பதை நாம் நன்கு அறிவோம். எமது புனிதரும் தனது பணிக்காலங்களில் இயற்கையை மிகவும் அன்பு செய்தார். பறவைகள் விலங்குகள்மட்டிலே அவருக்கு அக்கறை நிறையவே இருந்தது. இதனால் என்னவோ மிகவும் அடர்ந்த காடுகளினூடாகப்பயணம் செய்த போதும், பாம்பு, கரடி, யானை, புலி, சிங்கம் போன்றவற்றை இவர் நேரே எதிர்கொண்ட போதும் ஒருபோதும் அவை இவரைத் தீண்டியதே இல்லை. இவ்வாறு இயற்கைமீது ஆழமான அன்புகொண்டார்.

கண்டியில் இவரது செபத்தால் இயற்கையையே இறை வல்லமையால் மாற்றி மழை பொழியச்செய்தார் என்பதையும், கல்கமுவ போன்ற இடங்களில் யானைத்தொல்லையை இல்லாமல் செய்ததையும் நாம் இவரது வாழ்க்கைக்குறிப்புக்களில் இருந்து அறிகிறோம். இவற்றோடும் ஏனைய பல ஆதாரங்களோடும் புனித யோசவாஸ் இயற்கை மீது ஆழமான அன்பு கொண்ட நல்ல துறவியாக இருந்தார் என்றும் காணக்கூடியதாக இருக்கிறது. கீழைத்தேய நாடுகளான இந்தியா, இலங்கை போன்றவை இயற்கை வளங்களால் பசுமையாய் காணப்படும் நாடுகள், மக்களின் உயிர்நாடி இயற்கையின் வனப்பு என்பதை உணர்ந்து நிலைநாட்டியது இவரது பணியின் சிறப்பியல்பாகும்.

## மருத்துவமும் மறைப்பணியும்

குணமாக்கும் பணியில் இயேசுவின் பங்களிப்பு விரிவாக்கம் கொண்டது. இதற்கமைய இறைமகன் இயேசுவின் நற்செய்தியைப் பரப்ப பல மறைபணியாளர்கள் இலங்கையின் பல பகுதிகளுக்கும் காடு, மேடு, ஆறு, குட்டை, மலைகள், வெளிகள் என்பவற்றைக் கடந்து சென்றனர். இவ்வாறான இடங்களில் தாம் பெற்றுக்கொண்ட அனுபவத்தால் மக்களின் உடல் நோய் தீர்க்கும் வைத்திய முறைகளையும் கற்றுக் கொண்டனர். ஓரிடத்தில் கண்ட மூலிகைகள், மரக்கறிவகைகள், கனிவகைககள் போன்றவற்றை ஏனைய மறைத்தளங்களுக்கும் கொண்டு சென்றனர். தாம் சென்ற இடங்களில் வைத்தியத் தேவைக்கு இவற்றை பயிரிட்டு பயன்படுத்தினார்கள்.

எமது மண்ணில் முன்பு காணப்படாத தக்காளி, மிளகாய் போன்றவற்றையும் பல மருத்துவ குணமிக்க மூலிகைகள் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங்களையும் கொண்ட வைத்திய ஏடுகளையும் தாம் பணிசெய்த இடங்களுக்குக் கொண்டு சென்று மக்களுக்கு மருத்துவ உதவி செய்தனர். யோசவாஸ் அடிகள் தமது பணிக்காலத்தில் எப்போதும் மருத்துவப் பொருட்களைக் கொண்டு சென்றதையும், மக்களிற்கு தனிப்பட்ட விதத்தில் இவர் மருத்துவ உதவிகளை வழங்கியதையும் காணலாம்.

கோவைக்குருக்கள் சுதேச வைத்தியத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாய் இருந்தனர் போத்துக்கீசம், அராபியா, தென் அமெரிக்கா, தென்கிழக்காசியத்தீவு போன்ற நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு அறிமுகமாகிய மூலிகை மருத்துவ முறைகளைக் கற்று, சேவையாற்றுவதில் இக்குருக்கள் ஈடுபாடு கொண்டவர்களாய் இருந்தனர். கோவாவில் சுதேச மருத்துவமனைகள் நிறுவி மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கியதையும் பார்க்கின்றோம். நாளடைவில் யோசவாஸ் அடிகள் காலத்திலும் குறிப்பாக வைசூரி பரவிய போதும், அடுத்து வந்த காலங்களிலும் ஒரற்றோறியன் சபையின் குருக்கள் வைத்தியம் செய்து, நோயாளர்களைப்பராமரித்ததையும் அறியலாம். குறிப்பாக கண்டி அரசன் அரண்மனையிலேயே குருக்களை மருத்துவத்திற்காகப் பணிக்கு வைத்திருந்தான் என்பதையும் காண்கின்றோம். இப்படிப்பட்ட மருத்துவ அறிவினை இக்குருக்கள் தாம் பணிசெய்த இடங்களில் சுதேசிகளுக்கும் பரப்பினர் என்று பல குறிப்புக்களில் இருந்து நாம் அறிகின்றோம்.

இவ்வாறு மறைப்பணியாளர்களின் மூலிகை மருத்துவ அறிவு அவர்கள் பணியாற்றிய இடங்களில் அரசர்களுக்கு அருகில் சென்று பணியாற்றுவதற்கும் அவர்களது மனங்களை வெல்வதற்கும் பெரும் பயனுடையதாக இருந்தவேளை சுதேச மக்களுக்கு பணியாற்றுகின்ற போது அவர்களது மனங்களை அறியவும், கிறிஸ்துவை அறியச் செய்யவும் பெரும் உதவியாக மருத்துவ அறிவு துறவிகளுக்கு பெரும் பயன் அறித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வே போதனையாய்

யோசவாஸ் அடிகளின் தரித்திர வாழ்வும், ஏழ்மையும் கீழ்ப்படிவும் இவரது தூய பிறரன்பும் அவரைச்சந்தித்தவர்களுக்கு அவரை மட்டும் அல்ல அவர் அறிவித்த கிறிஸ்துவை அடையாளப்படுத்தின.

மாபெரும் உரோமய பேரரசன் யூலியஸ் சீசரை அடையாளப் படுத்தும். லத்தீன் மொழி வரிகள் 'VENI, VIDI,VICI', வந்தார், பார்த்தார், வென்றார், என்பதாகும். இதுபோல புனித யோசவாசினைக்குறித்த புகழ்பூத்த வார்த்தைகள், 'இதனுடன் இலங்கையை அடைந்தார், இதனுடன் வாழ்தார், இதனோடு இறந்தார்' என்று அடிகளில் தவவாழ் விற்கு புகழாரம் சூட்டுவதைக்காணலாம். யோசவாஸ் அடிகளின் பரிசுத்தமான, எளிமையான, சாட்சிய வாழ்க்கையைக்குறித்து பல உதாரணங்களைக்கூறலாம். எனினும் சிறப்பாக அடிகள் கண்டியில் சிறையில் இருந்தபோது நடந்த சம்பவம் அவரது தூய வாழ்விற்கு பெரிதும் சான்று பகர்கின்றது.

ஒல்லாந்தரின் ஒற்றன் என்று எண்ணி அடிகளை கண்டி மன்னன் கைது செய்து சிறையில் அடைத்திருந்தான். அப்போது அவர் அங்கு நடந்துகொண்ட விதம் அவரை ஓர் புனிதராக அடையாளப்படுத்தியது. மக்களும் (கிறிஸ்தவர்கள்) நீண்ட நாட்களின் பின்பு குருவான வரைக்காண ஆசையோடு இருந்தனர் ஆனால் அரசனிடம் இருந்து அனுமதி இல்லாமல் இருந்தது. இதன்போது கண்டி அரசனுக்கு விலைமதிப்புள்ள பட்டாடை விற்க வந்திருந்த வாணிகள் மக்கள் மூலமாக யோசவாசைக்குறித்து கேள்விப்பட்டவனாய் பட்டாடைக்கான பணத்திற்குப்பதிலாக அடிகளை சிறையில் சந்திக்கவும், அவரிடம் பாவ அறிக்கை செய்யவும் அரசனிடம் அனுமதி கேட்டான். இச்செயலால் மிகவும் கவரப்பட்ட அரசன் அவனுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் அடிகளாரை சிறையில் சென்று சந்திக்க அனுமதி அளித்தான். இவையாவும் இவரது தூய, எளிய தவவாழ்வின் மூலமாக பெற்றுக்கொண்ட மறைபரப்பின் கனிகளாகும்.

## இறைப்பற்றின் இருப்பிடம்

யோசவாஸ் அடிகளின் வாழ்வு, பணிகள் முழுவதுமே அவரின் இறைபற்றின் முழுமையான வெளிப்பாடாகும் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இவரது நீண்ட மறைப்பரப்பு பயணங்களின்போது காடுகளின் நடுவே அமைதியான தியானத்தோடு செபமாலை சொல்லிக்கொண்டே பல நாட்கள் சோர்வில்லாமல் நடந்து செல்வார். குறிப்பாக இவர் திருப்பலி நிறைவேற்றும் போது இவரது இறைபற்று வெளிப்படுத்தப்படும் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் உள்ளடங்கியதாக இவரது திருப்பலிகள் இருக்குமாம். சிலவேளைகளில் இவர் திருப்பீடத்தில் நின்றபடியே ஆழ்நிலைத் தியானத்திற்குள் சென்றுவிடுவதுண்டு. சிறு பிள்ளைகள், பீடப்பணியாளர்கள் இவர் தூங்குகிறார் என எண்ணி அவரது திருப்பலி உடையை பிடித்து இழுத்த சுவாரசியமான சம்பவங்களும் நடைபெற்றதை வரலாறு கூறுகின்றது.

அதிவிசேடமாக மரியன்னையில் இவர் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். மரியன்னையின் பிரார்த்தனைகளை சொல்லும்போது இவர் ஆழ்நிலைத்தியானத்திற்கு அடிக்கடி சென்றுவிடுவார். அத்தோடு 'அருள் நிறை மரியே', அருள் நிறை மரியே, என்று தொடர்ந்து மரியன்னையின் நாமத்தைச்சொல்வதில் மட்டற்ற இன்பம் கண்டார்.

குறிப்பாக தனது பணிவாழ்வில் மரியன்னையை ஆழமாக உட்புகுத்தி தனது இரத்தத்தால் கைப்பட அர்ப்பண வாழ்வை மரியன்னைக்கும் கையளித்து அதன் வழியே பணி செய்தது சிறப்பானதே ஆகும்.

திருப்பலி நிறைவேற்றமுன் இன்னொரு குருவானவர் இருந்தால் கட்டாயம் ஒப்பரவு அருட்சாதனம் செய்து திருப்பலியை நிறைவேற்றினார். அடிகளது இறைப்பற்றுக்குறித்துக் கூறும்போது பாஸ்கல் (paschal) என்கின்ற கண்டியில் பிறந்த போத்துக்கீசிய இளைஞன் யோசவாஸ் அடிகள் திருப்பலி ஒப்புக்கொடுக்கும்போது நிலத்தில் இருந்து மேலே (அந்தரத்தில்) எழுந்து நின்றதை தான் கண்களால் கண்டதாக சான்று பகர்ந்திருக்கின்றர். இவரது தூய வாழ்வைக்கண்ணுற்ற கத்தோலிக்கர்கள் மட்டும் அல்ல மாறாக இந்துக்களும், பௌத்தர்களும், முஸ்லீம்களும் இவரை 'ஓர் மிகவும் அசாதாரண மனிதர்', என்று விழித்து அழைக்கும்படி இவரது வாழ்வே போதனையாய் இருந்ததை நாம் காண்கின்றோம்.

இரவு நேரங்களில் செபமாலையின் பின்பு இவர் ஆலயத்தில் செபத்தில் நீண்டநேரம் நிலைத்திருப்பார். சில வேளைகளில் தூங்கச்செல்லாது திருப்பீடத்தின் முன்பு முழந்தாள் இட்ட நிலையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கிவிடுவாராம் அல்லது செபத்தில் முழந்தாள் படியிட்ட நிலையிலேயே சுவரோடு சாய்ந்து உறங்கிவிடுவாராம் இவ்வாறாக தூய யோசவாஸ் அடிகள் ஆழமான செப வாழ்வின் மூலமாக தனது வாழ்க்கை முழுவதும் இறைபற்றுக் கொண்ட ஓர் மாமனிதராக வாழ்ந்தார்.

## பிறப்பின் வெளிப்பாடு

யோசவாஸ் முனிவர் கண்டியில் பணியாற்றிய ஐந்து வருடங்களுக் குள்ளேயே இவரது இருப்பையும், வாழ்வையும் குறித்து கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல பிறசமயத்தவரும் வெகுவாகப்பேசிக்கொண்டனர். கௌரவத்துடன் இணைந்த அன்பில் தங்களில் ஒருவராக அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

பணியின்போது மக்கள் காணிக்கையாகக்கொடுக்கும் அரிசியையும், ஏனைய பொருட்களையும் இவர் தமக்கென்று எடுத்துக்கொள்ளாமல் அங்கேயே வைத்து ஏழைகளுக்கு பகிர்ந்து அளித்து அதிலே நிறைவு காண்கின்ற ஓர் இறை மனிதனாகத் திகழ்ந்தார். கண்டிய அரசன் விமலதர்மசூரியன் இவரது பிறரன்பைக்குறித்தும், தன்னல மறுப்பைக் குறித்தும் வியப்படைந்து அடிக்கடி தன்னிடம் நெருக்கமானவர்களிம் பேசிக்கொண்டான். சிறப்பாக வைடூரி நோயால் மக்கள் பீடிக்கப்பட்டு துன்புற்றபோது தமது நலனிலே அக்கறை கொள்ளாது அவர் ஆற்றிய பிறரன்புப் பணிகளைக்கண்ட அரசன் பௌத்தமத பிக்குமார் யோசவாசிடம் இருந்து பிறரன்பைக்கற்க வேண்டும் என்று கூறும் அளவிற்கு இவரது புனிதத்தியாகத்தை மெச்சினான். இவ்வாறு தனது தன்னலமற்ற பிறரன் பினால் அனைவரது உள்ளங்களிலும் ஓர் நடமாடும் நற்செய்தியாக யோசேவ்வாஸ் முனிவர் இடம்பெற்றார்.

மேற்கண்ட புனித யோசவாஸ் அடிகளின் வாழ்வில் சிறந்தோங்கிய பண்புகள் மூலம் அவரது வாழ்வைக்குறித்து அறியவும் விசேட விதமாக, உதயமாகும் புதுவருடம் புனித யோசவாசின் ஆண்டாக இலங்கையில் அனுசரிக்கப்பட இருப்பதால் அவரைக்குறித்த அறிவை நாமும் பிறருக்கு அறிவிக்கவும் முயற்சிக்க பெரும் உதவியாக அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


➢ மறை அறிவிப்புப்பணி - 2ம் வத்திக்கான் சங்க ஏடு.

Matthew, S.A.I., ***Cathohic Church in Ceylon-Early History, Srilanka,*** 2009.

Don peter, W.L.A. ***Studies in Ceylon Church History,*** The Catholic Press, Colombo, 1963.

பெரேரா, எஸ். ஜி., பதிப்பாசிரியர் ஞா. பிலேந்திரன், ***இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப்வாஸ் வாழ்வும் பணியும்,*** யாழ்ப்பாணம், 2010.

ஜெயசீலன், T.E, *யாழ், திருச்சபை வரலாறு,* வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், 1997.

Zaleski, L.M., ***The Apostle of Ceylon Fr. Joseph Vaz, (An Oratorian Priest) 1651-1711,*** Jaffna, 1991. (Originally published in 1895)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசவாஸ் அடிகளாரின் மறைக்கல்வி அளித்தல் முறைகள்

திரு.கி.சாள்ஸ் பங்கிராஸ்
நிரந்தர மறையாசிரியர்
யாழ்ப்பாணம்

''நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும் படி கற்பியுங்கள்'' என்ற ஆண்டவர் இயேசுவின் பணிப்புககு ஏற்ப திருத்தூதர் காலம் தொடக்கம் திருச்சபை நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தனது முதன்மையான பணியாகச் செயற்படுத்தி வருகின்றது.

திருத்தூதர்கள் உலகின் பல்திசைநாடுகளுக்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்ட நற்செய்தியில் நம்பிக்கை கொண்டவர்களிடம் அதை உறுதிப்படுத்தவும், அமுல்ப்படுத்தவும் திருத்தூதர்கள் வழியாக அரும் அடையாளங்கள் இடம்பெறலாயிற்று. போதனைகளால் மட்டுமல்ல தமது வாழ்வாலும் சான்று பகர்ந்தார்கள். திருமுகங்கள் எழுதி கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை மேலும் அமுல்படுத்தினார்கள். தவறுகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தினார்கள்.

திருத்தூதர்களைத் தொடர்ந்து நற்செய்தி அறிவிப்புப் பணியிலும்(யையும்) நம்பிக்கையை வளர்க்கும் பணியிலும் (யும்) காலத்துக்குக்காலம் திருச்சபைத் தந்தையர்களாலும், மறைபரப்பாளர் களாலும் புதிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. காலத்துக்கக்காலம் மறைபரப்பாளர்களாக உலக நாடுகளிடையே பணியாற்றியவர்கள் அந்தந்த நாட்டு மக்களின் மொழி, பண்பாடு காலாச்சாரங்களுக்கு இசைய மறை அறிவுப்புப் பணியையும் மறையைக் கற்பிக்கும் பணியையும் செயற்படுத்தி வந்துள்ளனர். பிரதேச மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்கு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டு செயற்பட்டார்கள். இவ்வாறாக பணிபுரிந்த மறைப் பணியாளர்களின் வரிசையில் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் மறைப்பணியாற்றிய புனித யோசவாஸ் அடிகளாரும் ஒருவராவார்.

இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் இவரால் ஆற்றப்பட்ட மறைப்பணியையும் குறிப்பாக மக்களின் நம்பிக்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பதற்கு அடிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## I. புனித யோசவாஸ் அடிகளாரின் பிறப்பும் சிறுபராய வாழ்வும்

இந்தியாவில் கோவாவில் பெனோலிம் என்னும் இடத்தில் கிறிஸ்தோப்பர்வாஸ், மரியடி மிராண்டா தம்பதியர்களுக்கு மகனாக யோசேவ்வாஸ் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் நாள் பிறந்தார். இவருக்கு சகோதர சகோதரிகள் ஐவர் உண்டு. பிராமண வர்க்கத்தைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே சுதேச மொழியான கொங்காணியையும் போத்துக்கேய மொழியையும் கற்றுக்கொண்டார். காரிருள்கலைய மெல்லிய ஒளிக்கதிர்களப் பரப்பிப் படிப்படியாக மேலெழும் கதிரவன் பார்முழுவதிற்கும் தன் ஒளியைப் பரப்பிப் பிரகாசிப்பது போல சிறுவன் யோசவாஸ் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வயதிலும் உடலிலிலும் வளர்ந்தது போல கல்வி அறிவிலும் ஆன்மீகத்திலும் வளர்ச்சியடைந்தார்.

இவரின் பெற்றோர் தங்கள் மகன் ஒரு குருவாக வரவேண்டு மென்ற ஆவலில் அவரைக் கடவுள் பத்தியில் பயிற்றுவித்து வரலாயினர். சிறுவன் யோசவாஸ் பெற்றோரின் விருப்பத்திற்கு அமைந்தவராக முழுமனதுடன் பள்ளிப் படிப்புடன் இலத்தின் மொழியையும் கற்பதில் ஈடுபடலானார். அதற்கு மேலாக தேவ பக்தியில் வளர்ச்சிபெற செபம், தவம், தியானம் ஆகியவற்றில் அதிக நேரத்தைச் செலவளித்தார்.

### சிறுவயதிலேயே முன்மாதிரியாக வாழ்வு

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்னும் முது மொழிக்கு ஏற்ப சிறுவனான யோசவாஸ் ஏனைய சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். பலரும் சிறுவன் யோசவாஸ் மட்டில் மதிப்பும், மரியாதையும் காண்பித்து வரலாயினர். அத்துடன் அவரது வாயில் பிறரை புண்படுத்தக்கூடிய எந்த ஒரு கடின வார்த்தைள் ஒருபோதும் வெளிவந்ததில்லை.

தினமும் அதிகாலையில் எழுந்து கோவிலுக்குச் சென்று திருப்பலியில் பங்குபெறுவார். அதன்பின்னர் பாடசாலைக்குச் செல்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் செல்லும் பொழுதெல்லாம் தமக்குத்துணையாக திருச் செபமாலையைக் கொண்டு செல்வார். அத்துடன் செபித்துக் கொண்டும் செல்வார். இறந்தவர்களின் அடக்கச் சடங்குகளில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றிற்காக மன்றாடுவார்.

சிறுவனான யோசவாஸ் நறுமணம் கமழும் மலர்போல தமது வாழ்வால் பலரைக் கவர்ந்தார். பள்ளிக்கூட மாணவர்கள் பலரும் இவரைப் பின்பற்றி செபமாலை செபிக்கவும், தினமும் திருப்பலியில் பங்கு கொள்ளவும் தொடங்கினார்கள். பூவோடு கூடிய நாரும் நறுமணம் பெறுவதுபோல அவரது பள்ளித் தோழர்களும் மணம் வீசும் மலர்களானார்கள். யோசவாஸ் நடமாடும் மறைக்கல்விப் புத்தகம்போல வலம் வரலானார்.

## இறந்த ஆன்மாக்களுக்காக செபிப்பதில் தனித்தன்மை கொண்டவர்

யோசவாஸ் இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவதில் மிகவும் அதிகமான பிரியமுள்ளவராக விளங்கினார். தான் ஒருவர் மட்டும் ஆன்மாக்களுக்காக மன்றாடினால் போதாது என்பதை உணர்ந்தவராக இரவு வேளைகளில் தமது தோழர்களோடு புறப்பட்டு தெருவீதிகளில் திரிந்து வீடுகளில் உள்ளவர்களை உரத்த சத்தமாகக் கூப்பிட்டு மரித்த ஆன்மாக்களுக்காக செபிக்கும்படி சொல்லுவார். (இறந்த ஆன்மாக் களுக்காக மன்றாடும் நல்வழக்கத்தை இலங்கையில் அவர் பணிபுரிந்த காலத்திலும் நிலைநாட்டினார் என்று கூறப்படுகிறது. இப்படியான வழக்கம் இக்காலத்திலும் இலங்கையில் பல பங்குகளில் கார்த்திகை மாதத்தில் இரவில் துக்கமணி அடித்து ஆன்மாக்களுக்காக செபிக்கும் வழக்கம் இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்தினர் மத்தியில் உப்பாக ஒளியாக

யோசவாஸ் தான் மட்டும் ஞான வாழ்வில் முன்னேறினால் போதாது தனது குடும்பத்தினர் உற்றார் உறவினர்களும் வளர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுள்ளவராக இருந்தார். அவர்களுடன் பேசும்போதெல்லாம் ஞானவாழ்வு தொடர்பான விடயங்களையே பேசுவார். ஞானநூல்களில் உள்ள படிப்பினைகளை எடுத்துச் சொல்லுவார். தான் பெற்ற மறை அறிவை அவர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அவரது விருப்பமாக இருந்தது. இதனால் குடும்பத்தினர் இவர் மட்டில் தனியாக மதிப்பும் மரியாதையும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

## II. குருவாக திருநிலைப்படுத்தப்படுதல், பணியில் சிறப்புறுதல்

கோவையில் அமைந்துள்ள இயேசு சபையாரின் கல்லூரியில் பயின்றார். புனித தோமஸ் அக்குவைனஸ் கல்லூரியிலும் டோமினிக்கன் துறவி சபையினரால் கற்பிக்கப்பட்டார். 1676ம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். யோசவாஸ் தமது பணி வாழ்வில் இறை வார்த்தையைப் போதிப்பதில் சிறந்தவராக விளங்கினார். அதைவிடவும் மேலாக நற்செயல்கள் புரிவதில் அதிக விருப்பமுடையவராக அதில் மேன்மையுடன் விளங்கினார். இவரது இத்தகைய வாழ்க்கையால் பலர் கவரப்பட்டடார்கள். தேனுள்ள மலரை தேனீக்கள் மொய்ப்பது போல மக்கள் பெருந்திரளாக இவரது வார்த்தைகளைக் கேட்பதற்காக சூழ்ந்து கொள்வார்கள். நகரகத்தின் பிதாக்களும், செல்வந்தர்கள் பலரும் யோசவாஸ் அடிகளாரைத் தங்கள் ஞான வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டனர். தங்கள் உள்ளத்தின் இரகசியங்களை அவருக்கு ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துவர். அவரது ஞான அறிவுரைகளைக்கேட்டு மனம்மாறி பாவ அறிக்கை செய்து தமது வாழ்வை மாற்றிக்கொண்டனர்.

## தாழ்ச்சியின் வடிவம்

இவ்விதமாக பெரியோர், சிறியோர் என அனைவராலும் உயர்வாக மதிக்கப்படும் ஒரு குருவாகத் துலங்கினார். ஆனால் யோசவாஸ் அடிகளார் புகழை, பெருமையை விரும்பியவரல்லர். தான் தங்கியிருக்கும் வீட்டிலேயே ஒரு சிறிய பள்ளிக்கூடம் நடத்தி அவ்வூர் இளைஞர்களுக்கு இலத்தீன் மொழியைக் கற்பிபத்து வந்தார். அத்துடன் மறைக்கல்வியும் கற்பித்தார். அவர்களிடையே இறை பக்தியை தூண்டி வளர்த்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மக்களின் நிலை துணைபுரிய ஆவல்

16ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் போத்துக்கேயரின் வருகையால் இலங்கையில் போதிக்கப்பட்ட கிறிஸ்தவமறை தீவின் கரையோரப் பகுதிகளில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வளர்ச்சி பெற்றிருந்தது. மறைப்பணியாளர்கள் பலமுறைகளில் தம்பணிகளைை சிறப்புடன் ஆற்றிவந்தனர். ஆனால் 17ம் நூற்றாண்டின நடுப்பகுதியில் ஒல்லாந்தரால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் போத்துக்கேய ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து முற்றாக நீக்க வேண்டுமென்று தீவிரமாக செயற்பட்டனர். எனவே போத்துக் கேயரால் இலங்கையில் கொண்டுவரப்பட்ட கத்தோலிக்க மதத்தினரைக் கொடூரமாக துன்புறுத்தி முற்றாக அழித்துவிட முற்பட்டனர். கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்க ஆலயங்கள் பாடசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒல்லாந்தரின் கல்வினிஸ்மதம் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. கத்தோலிக்கர் நாடு கடத்தப்பட்டனர் சிறையிடப்பட்டனர். தண்டப் பணம் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். கத்தோலிக்க மறைப்பணியாளர் அனைவரும் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர். குருக்களுக்கு மறைவிடம் கொடுக்கும் கத்தோலிக்கர்கள் தண்டிக்கப்பட்டனர்.

இலங்கையில் கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரால் அழிக்கப் படுவதையும், மக்களின் அவலநிலையையும் கோவாவிலிருந்து சீனா நாட்டிற்குச் சென்று திரும்பிச் செல்லும் வழியில் இலங்கையில் தங்கியிருந்தபோது தான் கண்களால் கண்டவற்றை குருவானவர் ஒருவர் மூலம் அறிந்துகொண்ட யோசேவ்வாஸ் அடிகளார் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டார். இதன் காரணமாக தமது நெருங்கிய குருக்களின் ஆலோசனையைக் கேட்டு அறிந்து கொண்டார்.

இலங்கையில் ஆன்மீக வரட்சியில் பரிதவித்த மக்களை இறைவனின் மக்களாக மீண்டும் பிரகாசிக்கச் செய்ய ஆவலாயிருந்தார். இறைவனும் இலங்கை மக்கள் மட்டில் இரக்கம் கொண்டு அடிகளார் மூலம் அவர்களுக்குப் பணிபுரியச் சித்தமாயிருந்தார். யோசவாஸ் அடிகளாரும் இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சிலுவையின் முன் அதிக நேரத்தைச் செலவிட்டு ஆண்டவரிடம் மன்றாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நோக்கிய புறப்பாடு

1686ம் ஆண்டு பங்குனி மாதம் இலங்கை நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்தார். தம்முடன் செபப்புத்தகத்தையும், திருப் பலிக்குத் தேவையான பொருட்களையும் மட்டுமே எடுத்துக்கொண்டார். வேறு எவற்றையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. உதவியாளர்களாக தனது சபைக்குரு ஒருவரையும், சகோதரன் ஒருவரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படலானார். வரும் வழியில் முன்பு தான் மறைப்பணிபுரிந்த கன்னடப்பிரதேச மக்களை சந்தித்து அவர்களுக்கு மறைப்பணிகள் பல செய்தார். ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் அம்மக்களோடு தங்கியிருந்து அவர்களை விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தினார்.

1687ம் ஆண்டு தை மாதத்தில் கன்னடப் பிரதேசத்தை விட்டு காட்டுப்பாதைகள் வழியாக கால்நடையாகவே கடல் யாத்திரையாகவும் மலையாளப் பிரதேசததிற்குள் சென்றார். அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சந்தித்துக் கொண்டார். மேய்ப்பனில்லாத ஆடுகள் போன்று வாழ்ந்த அம்மக்களுக்கு போதனைகள் வழங்கியும், பாவசங்கீர்த்தனம், நற்கருணை ஆகிய அருட்சாதனங்களை வழங்கி அவர்களைத் தேற்றினார்.

மலையாளத்தில் தங்கியிருந்த காலத்தில் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார். திருவாங்கூர் பகுதியில் இருந்த இயேசு சபைக் குருக்களின் உதவியைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்குள் இரகசியமான முறையில் செல்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார். ஒல்லாந்தருடைய சிறைக்கைதிகள் அணியும் எளிமையான உடையையும் அவர்களிடமிருந்து பெற்றக் கொண்டு பிச்சைக்காரன் வேடத்தில் இலங்கைக்குள் கடல் வழியாக காலடிவைத்தார்.

யோசவாஸ் அடிகளார் மறைப்பணியில் அனுபவித்த துன்பங்கள் இடையூறுகள் அளவிட முடியாதவையாகும். இருந்தபோதும் தமது முயற்சிகளில் தளர்வடையாது செயலாற்றி வந்தார். அன்றாட வாழ்வில் தனதும் தம்மோடு கூடவே பணிபுரிந்தவர்களினதும் தேவைகளை நிறைவு செய்வதற்கு எதுவுமே இல்லாத நிலை காணப்பட்டது. கடவுள் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஒருசில நல்ல உள்ளம் படைத்த கிறிஸ்தவர்கள் மூலம் கடவுள் அவர்களுக்கு உதவிகள் பல புரிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த நிலப்பரப்பில் எங்கும் சிதறி வாழ்ந்த கிறிஸ்தவர்களை தேடிக் கால்நடையாகவே சென்றார். ஆடுகளை தேடி அலையும் நல்ல ஆயனாய் மக்களைத் தேடிச் செல்வார். அவர்களுக்கு ஞான அறிவுரைகள் வழங்கி அவர்களிடம் காணப்பட்ட தவறான துர்க் குணங்களைத் திருத்தி உலகியல் போக்கில் வாழ்ந்தவர்களை ஞான வழியில் நடப்பதற்கு ஊக்கமூட்டுவார். தனது எளிமையான வாழ்க்கைமுறையில் மக்களின் மத்தியில் விரும்பப்படும் ஒருவராக விளங்கினார்.

புதிய இடங்களுக்குச் சென்றதும் தனது களைப்பைப் பராது, இளைப்பாற்றியையைத் தேடாது உடனேயே மக்கள் பணியில் ஈடுபடுவார். இறைவார்த்தையைப் போதிப்பதும் அருட்சாதனைகளை வழங்குவதும் அவரது வழமையான செயற்பாடுளாக இருந்தன. இவ்விதமாக ஓய்வின்றிச் சூழலும் கடிகாரம் போல பணிகள் புரிந்த போதும் தனிப்பட்ட ஆன்மீக வாழ்வில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டார். விடியற்காலையில் எழுந்து செபத்தில், தியானம் செய்வதில், ஞானவாசனையில் ஈடுபடுவதில் தவறுவதில்லை.

தான் தங்கி இருக்கம் இடங்களில் உள்ள கிறிஸ்தவர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு சாதாரண செபங்களைச் சொல்லிக் கொடுப்பார். மறை உண்மைகளை விளக்கிக்கூறுவார். அத்துடன் சிறுபிள்ளைகளை ஒன்றுகூட்டி பாடங்களை கற்பிப்பார். நற்கருனை, ஒப்புரவு அருட்சாதனங்களை வழங்கி ஊக்கமூட்டுவார். அதேவேளையில் நோயாளர்கள், வயோதிபர்கள் உள்ள வீடுகளுக்கு சென்று அவர்களுக்கான சரீர உதவிகளை செய்வார். புண்களை தமது கைகளால் கழுவி மருந்து கட்டுவார். இரவு பகல் பாராது எவ்வேளையிலும் சகல மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு தயங்கமாட்டார்.

இப்படியாக பலதரப்பட்ட சேவைகளை ஓய்வின்றி செயற்பட்ட போதும் மூடப்பட்ட நிலையில் கவனிப்பற்று பாழடைந்து கிடந்த கோவில்களை புதுப்பித்து வழிபாட்டுக்கு ஏற்புடைய ஆலயங்களாக மாற்றியுள்ளார்.

ஆன்மீகப் பணிகளுடன் வேறுபல மக்கள் நலப்பணிகளும் அவரால் ஆற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவர்களில் சிலர் பெரும் கடன்களுக்கு ஆளாகி அவற்றிலிருந்து மீள முடியாதவர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வழங்கியவர்களின் தொல்லைகள் நிமித்தமாக தங்கள் பிள்ளைகளை வேலையாள்களாக கொடுத்திருந்தார்கள். இதை அறியவந்த யோசவாஸ் அடிகளார் அம்மக்கள்மேல் இரக்கம் கொண்டு மிகுந்த முயற்சிகளைச் செய்து பணம் செலவிட்டு அநேகம் பேரை மீட்டுள்ளார். இப்படியாக மீட்கப்பட்டவர்களில் பெண்கள், ஆண்கள் பலர் அடங்குவர். இவ்வாறு யோசவாஸ் அடிகளார் செயலாற்றியதற்கான காரணம் உடல்சார்ந்த நலன்களுக்காக அல்லாது ஆன்மாக்கள் மீட்புப் பெறவேண்டுமென்னும் ஆவலினாலேயே.

## கிறிஸ்தவத்திலிருந்து விலகிய மக்களை மீண்டும் தேடினார்

கிறிஸ்தவத்தை விட்டு விலகிய வேற்று மதவழிபாடுகளில் பங்குகொண்டு வந்த கிறிஸ்தவர்கள் பலரை மனம் மாற்றி மீண்டும் கிறிஸ்தவர்களாக்க அடிகளார் மேற்கொண்ட கடினமான முயற்சிகள் ஏராளம் என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக ஓர் சம்பவத்தை இங்கு எடுத்துச் சொல்லலாம்.

முன்பு கிறிஸ்தவனாக இருந்த ஒருவன் அரச உதவி பெற்றவனாகவும், கௌரமுள்ளவனாகவும் இருந்து வந்தான். கிறிஸ்தவர்களோடு உள்ள உறவிலிருந்து பிரிந்து சென்று பிற மதத்தினரோடு சேர்ந்து அவர்களுடன் குடியேறி வாழ்ந்து வந்தான். தான் முன்னர் கிறிஸ்தவனாக இருந்ததை மறுதலித்தான். யோசவாஸ் அடிகளார் அவனையும் குடும்பத்தினரையும் நல்வழிப்படுத்த முயற்சிகள் எடுத்தார். அவனோ அதற்கு இணைங்காதவனாக இருந்தான். தன்னையும் தன் குடும்பத்தவர்களையும் இது விடத்தில் தொடர்ந்து பின்வந்தால் கொலை செய்வதாகவும் எச்சரித்து வந்தான். ஆனால் அடிகளார் ஆன்மாக்களை மீட்கும் பணியில் தன் உயிரை இழப்பதற்கு சிறிதும் தயங்காதவர்.

ஒரு நாள் யோசவாஸ் அடிகளார் காணாமல் போன ஆட்டைத்தேடிச் சென்ற ஆயன் போன்று அந்த மனிதனின் வீட்டுக்குச் சென்று அவனை சந்திக்க காத்திருந்தார். அடிகளாரைக் கண்டதும் அவன் மனங்குழம்பினான். அடிகளாரை அறியாதவன் போல நடந்துகொண்டான். அப்போது அடிகளார் தான் தூரவழி நடந்து களைத்துள்ளதாகவும் இக் கிராமதில் கிறிஸ்தவருடைய வீடு இருப்பதை அறிந்து இங்கு தங்கிச் செல்வதற்கு வந்ததாகவும் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனிதனோ தான் ஒருபோதும் கிறிஸ்தவனாக இருந்ததில்லை என்றும் தான் அனுசரிக்காத மதத்தின் குருவுக்கு தன் வீட்டில் விடுதி கொடுப்பதில்லை என்றும் கூறி உடனடியாக வீட்டைவிட்டு வெளியேறி



விடவேண்டுமென்றும் எச்சரித்தான். அடிகளார் சற்றும் பயப்படாதவராக கடவுளில் நம்பிக்கை கொண்டவராக அவ்வீட்டிலேயே தங்கினார். ஊரார் இதனை அறியவந்தனர். இதனால் கடுங்கோபம் கொண்ட அம் மனிதன் அடிகளாரை கடும் சொற்களால் திட்டி அவமதித்தான். அடிகளாரோ மிகவும் சாந்தத்துடன் அவனை நோக்கி ஆன்மாக்களின் பேரில்கொண்ட இரக்கத்தால் மீட்புக்கான வழிகளை காண்பிக்க வந்ததாக பரிவோடு எடுத்துரைத்தார். அநேக நாட்கள் அங்கேயே தங்கி இருந்து பசி, தாகம் பாராது அம்மனிதனும், குடும்பத்தினரும் மனம் மாற்றம் பெறவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வந்தார். ஈற்றில் அம்மனிதனும் அவன் குடும்பத்தினரும் மனம்மாறி தமது வாழ்வை மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறாக அடிகளார் தொலைந்து போன ஆடுகளான கிறிஸ்தவர்களை தேடி மீட்டு இறைவன் மறையில் மீண்டும் கொண்டுவரலானார்.

பலவகையான வேலைகளில் யோசவாஸ் அடிகளார் நேரத்தைச் செலவளித்தாலும் ஆண்டவரின் வார்த்தையை பிறருக்கு எடுத்துச் செல்லுவதற்கும் தேவ உண்மைகளைப் படிப்பதற்கும் தவறுவதில்லை. “இறைவார்த்தையை அறிவி, வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு” என்று கூறும் பவுலின் வார்த்தைக்கு ஏற்ப யோசவாஸ் அடிகளார் தம்மிடம் பிச்சைக்கு வருகிற ஏழை மக்களுக்கும் செபிக்க கற்றுக் கொடுப்பார். கிறிஸ்தவ மறையை கற்றுக் கொடுப்பார். இந்த நல்ல வழக்கத்தை உண்டாக்கிய பெருமை அடிகளாரையே சாரும்.

அவருடைய இரக்க செயல்களினதும் நற்கிரிகைகளினதும் புகழ் எங்கும் பரவியதால் அவரைக் காண்பதற்காகவும் அவரது போதனையை கேட்பதற்காகவும் மக்கள் பலர் அவரிடம் வந்தனர். அவருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகள் கல்லான, கடின இதயம் கொண்டவர்களையும் மெழுகுபோல உருக்கிவிடும் வல்லமையுடையதாக விளங்கியது. “கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல” என்ற இயேசுவின் அறிவுரைப்படி யோசவாஸ் அடிகளார் இறைவனின் பணியில் தன்னை முழுமையாக கையளித்தார். தாய், தந்தை, சகோதரர், உற்றார், உறவினர் என்ற இரத்த உறவினரோடு உறவைப் பேணிக்கொள்வதை பொருட்படுத்தாது முற்றும் துறந்த ஒருவராகத் தம்மை இறைவனின் ஊழியத்திற்கு கையளித்தார். அவரது பணி வாழ்வு இலங்கை வாழ் மக்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒளியாக விளங்க இறைவன் அருள்புரிவாராக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசவாஸ் அடிகளில் காணப்பட்ட பணித்துவ மனநிலைகள்

அருட்சகோதரன் ச.ஜோசஞ்சுதன் IVD
2ம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

இலங்கை தேசத்தினுடைய, மறை வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் புனித யோசவாஸ் அடிகளின் அளப்பெரிய சேவையும் பங்களிப்பும் என்றுமே மறுக்க முடியாத ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிற தென்றால் அது எப்பொழுதுமே மிகையாகாது.

புனித யோசவாஸ் அடிகள், எமது இலங்கை தீவிற்கு இறைவன் கொடுத்த ஓர் அற்புதமான கொடை. அவருடைய வாழ்வும், பணியும் இன்று கத்தோலிக்கரான எங்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் ஆழமான ஒரு செய்தியையும், பாடத்தையும் என்றும் உரைத்து நிற்கின்றது. இறைவனால் விசேட விதமாக மறைபரப்புப் பணியாற்ற அழைக்கப்பட்ட புனித யோசவாஸ் அடிகளாரில் தனித்துவமாகக் காணப்பட்ட பணித்துவ மனநிலைகளை ஆராய்ந்து, அறிந்து அவற்றை இக்கட்டுரை ஊடாக பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் அப்போஸ் தலராம் புனித யோசவாஸ் அடிகளின் மறைப்பணி வாழ்வும், அவரில் காணப்பட்ட உயர்ந்த பணித்துவ மனநிலைகளும் ஒவ்வொரு மறைப்பணியாளருக்கும் ஒரு சவாலாகவும் எடுத்துக் காட்டாகவும் திகழ்வது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொன்றே.

திருச்சபையின், மறைத்தூதுப்பணி இறையாட்சியை அறிவிக்கவும், அதைக் கட்டியெழுப்பவும் பல்வேறு திருப்பணிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாறான பல்வேறு திருப்பணிகள் யாவும் இறையாட்சியை மையங்கொண்டதாகவும் அதனை நோக்கியதாகவும் அமையும் பொழுதுதான் கிறிஸ்துவின் உண்மையான திருப்பணியில் இணைந்து கொள்ளுகின்றது.

அந்த வகையில், புனித யோசவாஸ் அடிகளின் மறைப்பணி முழுமையாக இயேசுக்கிறிஸ்துவின் திருப்பணியில் வேருன்றி இருந்ததையும் இறையாட்சியை நோக்கிய ஓர் உன்னதமான பணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அவருடைய வாழ்வில் காணப்பட்ட பணித்துவ மன நிலைகளில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

**அடிகளாரின் ஆளுமை**

ஒருவருடைய ஆளுமைதான் அவருடைய மனநிலைகளின் எதிர்விம்பம் என்பார்கள். அடிகளாரின் ஆளுமையிலும் அவருடைய உன்னதமான மனநிலைகள் எதிரொலித்ததைக் காணக்கூடியதாக இருக்கும். இவருடைய ஆளுமை காந்த சக்தியைப் போன்று எல்லோரையும் ஈர்த்திழுக்கும் தன்மையுள்ளது. சமாதானமும் சகோதரத்துவமும் இவரில் இருந்து எப்பொழுதும் கதிர்வீச்சுகளாய் வெளிவீசிக் கொண்டிருக்கும்.

அளவான உயரம், அழகான சிறிய உடலமைப்பு அவதானிக்கும் விளிப்பான சிறிய கண்கள் இவையே. அடிகளாருக்கு இயற்கையாக அமைந்த தோற்றம் அடிகளாரின் உள்ளத்தில் குடிகொள்ளும் இறை சுதந்திரமும், மன மகிழ்வும், ஆழ்ந்த அமைதியும் இவரின் வெளித் தோற்றத்தில் அம்பலமாகிவிடும். குறைகூறி முறையிடுபவர் அல்லர் இவர். புரிந்துணர்வு மனப்பக்குவம் கொண்ட ஒரு பெரும் பொறுமைசாலி. தம்மை தேடிவருவோரை இரக்கத்துடன் வரவேற்று, எங்கும் எப்போதும் இவர்களுக்கு உதவி செய்ய தன்னை தயார்நிலையில் வைத்துக் கொள்வார். பிறர் அன்பு வாழ்வில் நிலை கொள்ளும் அடிகளார் சிறுவயது முதல் இப்பெருங்குணங்களால் அணிசெய்யப்பட்டிருப்பது இவர் வாழ்வின் சிறப்பாகும்.

**அடிகளார் செபத்தால் தன் வாழ்வை நிரப்புகிறவர்**

அடிகளார் செபத்திலும், செப வாழ்விலும் அதிக அக்கறை கொண்டவர். செபிப்பது இவருக்கு மிகவும் விருப்பமான செயல். எவரும் அறியா வண்ணம் தனது செபவாழ்வில் ஆழமாக ஊன்றியிருந்தார். தன்னுடைய ஆன்மீக காரியங்களில் சிறுவயது முதல் அக்கறை கொண்ட மனிதன். எந்தவொரு காரியத்தையும் செபத்தோடு ஆரம்பிக்கும் அழகான பண்பினைக் கொண்டவர் எம் அடிகளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிகளார் ஆன்மீக தாகம் கொண்டவர்

மறைபோதகப் பணியில் இவர் கொண்ட தணியாத ஆர்வம், இவருடைய ஆன்மீக தாக்கத்திற்கான அற்புதமான சான்றாகும். விசுவாச விதையை கிறிஸ்துவை அறியாத மக்களிடையே விதைக்க வேண்டுமென்று தன்னை முழுமையாக அப்பணிக்காக அர்ப்பணித்த உண்மையான பணியாளன் இவர். இலங்கை முழுவதுமான இவரது கால்நடை மறைப்பயணங்கள் இவரின் ஆன்மீக தாகத்தின் அளவிட முடியாத அடையாளங்கள். அச்சுறுத்தல்களும் அளவு கடந்த துன்பகரமான சவால்களுக்கு மத்தியிலும் கிறிஸ்துவை அடையாளப் படுத்தத் துடிக்கும் இவரது ஆன்மீகதாகம் சொற்களுக்கு அப்பாற்பட்டது. இவர் தான் பெற்றுக் கொண்ட அழைப்பையும் அவ் அழைப்பின் பொருளையும் தன் உயிரிலும் மேலாக நேசித்தார், பாதுகாத்தார். இவர் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் மேல் கொண்ட வேட்கைதான் இவரது அற்புதமான பணிக்கான ஆழமான அடித்தளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

## அடிகளார் அன்னை மரியா மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர்

அடிளாரிடம் விசுவாசம் அணையாத சுடராக கொழுந்து விட்டெரிந்தது. விசேட விதமாக அடிகள் அன்னை மரியாவின் அன்பினால் அதீதமாக ஆட்கொள்ளப்பட்டிருந்தார். அவருடைய எல்லாப் பயணங்களிலும், கத்தோலிக்க அடையாளமாக திருச்செபமாலையை எப்பொழுதும் தன்னுடன் அணிந்து கொண்டார். தனது போதனைகளிலும் கற்றுக் கொடுத்தல்களிலும், உரையாடல்களிலும் அன்னை மரியாவைப் பற்றி குறிப்பிடத்தவறுவதே இல்லை. விசேட விதமாக சந்தர்ப்பமும் சூழ்நிலை வாய்ந்தாலும் வாய்க்காவிட்டாலும், அன்னையின் இதயத்துடிப்பை வெளிப்படுத்தும் தருணங்களை எப்பொழுதும் தேடி உருவாக்கிக் கொள்ளுவார்.

## அடிகளார் மிக்க தாழ்ச்சி உள்ளவர்

அடிகளாரின் தாழ்ச்சி இயல்பானதும், உண்மையுள்ளதாகவும் இருந்தது. பல தருணங்களில் இவர் வழி வந்தவர்கள் இவருடைய தாழ்ச்சியைக் கண்டு வியந்துள்ளார்கள். தான் பணியாற்றும் அனைத்து தளங்களிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ச்சியுடனும், அன்புடனும் மற்றவர்களை ஏற்றுக்கொண்டு தனக்கு பொறுப்பாய் இருந்தவர்களிற்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு தாழ்ச்சியுடன் பூரண ஒத்துழைப்பு வழங்கினார். இவரின் வாழ்வியல் சிறப்பு என்னவெனில் மற்றவர்களின் அறிவுரைகளிலும், வழிகாட்டல்களிலும் இறைவனின் விருப்பத்தையும் வழிகாட்டலையும் உணர்கின்ற மனப்பக்குவம் கொண்டவர். பொறுப்புகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் நிலையும், பிறருக்காகவே தனது வாழ்வு முழுவதையும் தியாகம் செய்யும் அர்ப்பண மனநிலையும் இவர் இறைவனின் திருவுளத்திற்கு என்றும் பணிந்து வாழ்ந்தார் என்பதற்கு சான்று பகரும்.

**அடிகளார் ஒரு சமாதானப் பிரியர்**

இறைவனில் ஆழமான நம்பிக்கை கொண்ட அடிகளார், ஒரு மாபெரும் சமாதானப்பிரியர் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டிய சூழ்நிலை எழும்போதும், தனது மறை போதகப் பணியில் சவால்களையும் தடைகளையும் சந்திக்கும் போதும் அடிகளார் எப்பொழுதும் ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும் முன்வைத்து மக்களிடமும் குழுக்களிடமும் வாழ்ந்து வந்தார். எப்பொழுதும் நன்மை ஒன்றையே விரும்புவார். தனது பணியையும், வாழ்வையும் வெறுத்தவர் களுக்காகவும் தனது அன்றாட செபங்களை ஒப்புக் கொடுத்தார். தனது பணிப்பயணத்தில் சிறைவாசம் கொண்ட பொழுது அங்கும் அவர் ஓர் அமைதியின் கருவியாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

**அடிகளார் ஒரு நம்பிக்கையாளர்**

அடிகளாரின் நம்பிக்கை வாழ்வு இவரின் குடும்பத்தில் இருந்து இவர் பெற்றுக்கொண்ட ஒன்றாகும். இவர் இறைவனிலும், அவருடைய எல்லை கடந்த வழிகாட்டுதலிலும் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார். உயிர் ஆபத்துக்கள் கொண்ட சவால்களின் போதும் இறைபராமரிப்பில் உயிரோட்டமுள்ள நம்பிக்கை வைத்திருந்தார். தனது அனைத்து பணிச்செயல்பாடுகளிலும் இயேசுவின் முன்மாதிரிகையை ஆழமாக நம்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடிகளார் ஏழைகளின்பால் அதீத அன்பு கொண்டவர்

அடிகளார் ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் மேல் அதீத அன்பும், அக்கறையும் கொண்டவராக இருந்தார். இயேசுவின் அன்பை இவர்களோடு பகிர்ந்து கொள்வதில் இவர் தீராத ஆர்வம் காட்டினார். தனது இடர்பாடுகளுக்கு மத்தியிலும், தனக்கு கிடைந்த எல்லா வளங்களையும் ஏழைகளோடும், மனித நேயப்பணிகளிற்காகவும் பகிர்ந்தளிப்பதற்காக என்றும் முன்வருவார். இவர் இறைவனின் பராமரிப்பில் வைத்திருந்த ஆழமான நம்பிக்கை இவருடைய அன்புப் பகிர்வில் அன்றாடம் மலர்ந்தது. அவருடைய பற்றற்ற வாழ்வும் துறவற நிலையும் ஏழைகள் மட்டிலும், துன்புறுவோர், விளிம்பு நிலை மக்கள் அனைவர் மட்டிலும் அளவற்ற கரிசனையையும், ஆதரவையும் கொணர்ந்தது.

### அடிகளார் புனிதமிகு வாழ்வை வாழ்ந்தவர்

ஏற்கனவே மேற்குறிப்பிட்டதைபோல அடிகளுடைய தூய வாழ்வு எமக்கு பல செய்திகளை சொல்லுகின்றது. எந்த விதத்திலும் கிறிஸ்துவை அடையாளப்படுத்தாமல் அவருடைய செயல்பாடுகள் போனதில்லை. தன்னுடைய சொல், செயல் அனைத்திலும் அடிகளார் கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தினார். தனது வாழ்வின் அனைத்து சௌபாக்கியங்களையும் தன்னுடைய அழைப்பை முன்னிலைப்படுத்தி தியாகம் செய்தார். இன்றும் என்றும் எப்பொழுதும் அவரது புனிதமிகு வாழ்வு எமக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே அமைகின்றது.

ஆம், இயேசுக்கிறிஸ்து கொண்டிருந்த பணித்துவ மனநிலைகளின் சாயல் புனித யோசவாஸ் அடிகளிடமும் காணப்பட்டது என்றால் மறுப்பதற்கில்லை. இயேசுவை தன்னுடைய முன்மாதியாக கொண்ட அடிகள் தன் மறைப்போதனை குறித்து வைத்திருந்த பணித்துவ மனநிலைகள் ஒவ்வொன்றும் அடிகளார் ஊடாக எமக்கு இயேசுவைப் பற்றி சொல்லிக் கொண்டே இருக்கும்.

இயேசு வழி நின்று -
பணி கொண்டு
மறை சென்ன புனிதர்தம்
பணிதன்னில் - வழி கண்டு
மறை சொல்வோம் - வையமதில்
இயேசு வழி செல்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அன்னை திரேசா

அருட்சகோதரன் அ.போல் அனக்கிளிற்
4ம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை



'ஒருவன் தனக்காக அழும் கண்ணீர் அவனை மட்டுமே சுத்திகரிக்கிறது. அடுத்த உயிருக்காக அழும் கண்ணீர் அகிலத்தையே சுத்திகரிக்கிறது'. என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்தவள்தான் புனித அன்னை திரேசா உலகில் எந்த மனிதரும் அன்பை மகிழ்ச்சியை உணராமல் செத்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் சாகக்கிடந்த மனிதரையும், சுமையாகக் கருதாமல் சொந்தமாக்கி கொண்டவள் அன்னை. என்னுடைய துன்பக்கிண்ணத்தில் பருகுகின்றவனே என்னுடைய சீடன் என்ற இயேசுவின் இறைவார்த்தையை தன்னுடைய வாழ்வாக்கி, அந்த துன்பக்கிண்ணத்தில் இருந்து இயேசுவின் ஜீவ இரத்தத்தை பிழிந்து குடித்துத் தன் சீடர்களுக்கும் பருக்கியிருக்கிறார்.

எங்களிடம் இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்துவிடலாம், ஆனால் அழுகிச் சிவந்த புண்கள், நீரால் நிரம்பிய கண்கள், அழுக்கடைந்த கரங்கள், சாக்கடையில் புரண்ட கால்கள், நாற்ற மெடுக்கும் உடல் என்று தீண்டுவாரற்றுக்கிடந்த மக்களைத் தொட்டு அரவணைக்கும் ஆற்றல் அவ்வளவு எளிதல்ல. சமூகத்தில் விளிம்பு நிலை மக்களைத் தொட்டாள், பார்த்தாள், நுகர்ந்தாள், அவர்களுடன் உண்டாள், உறவாடினாள், அரவணைத்தாள் அன்னை. எந்த வள்ளலாலும் செய்யமுடியாத ஈகையை செய்தாள். இன்று புனிதையாக இறைவனை மகிமைப்படுத்துகின்றாள்.

## அன்னையின் பிறப்பு

அன்னை 1910ம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி ஓட்டோபான் பேரரசைச் சேர்ந்த அஸ்கப் (தற்போது ஸ்காப்கே) என்ற நகரில் நிக்கோலா – டிராணி என்ற தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி பிள்ளையாக பிறந்தான் அன்னேஸ் கோன்சா போஜாக்ஸியூ இதுதான் அன்னைக்கு அவரது பெற்றோர் இட்ட இயற்பெயர். கோன்சா என்றால் அல்பேனிய மொழியில் 'மலர்மொட்டு' என்பது பொருள். மலர் மொட்டு போன்று சிறுமி அழகாக இருந்ததால் கோன்சா என்றே பெற்றோர், உறவினர்களால் அழைக்கப்பட்டாள்.

தந்தை ஒரு அரசியல்வாதி, கோன்சா 8 வயதில் இருக்கும்போது நயவஞ்சகர்களின் நஞ்சுக்கு விருந்தாகி இறைவனடி சேர்ந்தார். தந்தையின் இறப்பிற்கு பின் வறுமை நிலைக்கு வந்து நின்றது குடும்பம். அனைத்தையும் சமாளிக்க தயாரானார் தெரேசாவின் தாய் கைவசம் இருந்த தையல் இயந்திரமும், அவளுடைய கைவேலைப்பாடுகளுக்கு இருந்த நல்ல கிராக்கியும் அவருக்கு கைகொடுத்து உதவின. இவற்றின் வருமானத்தை வைத்து குழந்தைகளை வறுமை தெரியாமலேயே வளர்த்தாள். எத்தனை துன்பம் வந்தாலும் நானும் இப்படித்தான் என் தாயைப் போல மன உறுதியோடு சமாளிப்பேன் என வாழ்க்கைப் பாடங்களை கற்று வளர்ந்தாள் சிறுமி கோன்சா.

## கோன்சாவின் அழைப்பு

ஸ்காப்ஜே நகருக்கு ஜாம்பரைக் கோவிக் எனும் இயேசுசபை குருவானவர் பங்குத்தந்தையாக இருந்தபோது அவருடைய வாழ்வு முறையாலும், வங்காளத்தில் பணிசெய்த குருக்களின் சவாலான வாழ்வு முறை புனிதர்களின் புண்ணிய வாழ்வு முறையாலும், ஈர்க்கப்பட்ட கோன்சாவின் ஆழ்மனதில் இறை அழைத்தல் என்ற விதை விழுந்து பண்பட ஆரம்பித்தது.

அதன் பின்னர் கோன்சா தனது பதினெட்டாம் வயதில் தன் வீட்டைவிட்டு வெளியே ஒரு கன்னியாஸ்திரியாக வாழ முடிவு செய்து வங்காளத்திலுள்ள லொரோட்டோ சபையில் இணைந்து அயர்லாந்தின் டப்னிங் நகரத்திலுள்ள பர்முக்குப்போய் தனது கன்னியாஸ் திரியாவதற்குரிய பயிற்சியை ஆரம்பித்தார், பின்னர் 1929, தை 6ம் திகதி கல்கத்தாவில் காலடி எடுத்து வைத்த இளைய திரேசா, குழந்தைகளுக்கு கல்வி பணியாற்றி, 1937 வைகாசி 14 அன்று கற்பு, ஏழ்மை, கீழ்படிதல் என்ற முதல் வார்த்தைபாட்டை எடுத்து, பிரான்ஸ் தேச விகியே நகரின் தெரஸ்மார்ட்டின் என்ற மிஷனரி சகோதரியின் பெயரைத் தனக்கு சூட்டிக்கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னையின் பணிவாழ்வு**

1947இல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் கிழக்கு வங்காளம் பிரிந்து போனது. இதனால் இலட்சக்கணக்கான அகதிகள் கல்கத்தாவே சுவர்க்கம் எனத் தஞ்சமடைந்தார்கள். அத்தோடு இரண்டாம் உலகப்போரினால் பர்மா, ஜப்பான் போன்ற நாடுகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டன. வங்கதேசத்திற்கு பர்மாவிலிருந்து வந்துகொண்டிருந்த அரிசி அடியோடு நின்று போனதால் அங்கு பஞ்சம், வறட்சி உருவானது. வங்காளத்தைச் சுற்றியிருந்த மக்கள் பெருந்திரளாகக் கல்கத்தாவை நோக்கி குடிபெயர்ந்து வந்தனர். இதனால் பிச்சை எடுத்தல், விபசாரம், களவு, கொலை, கயமை என்பன கல்கத்தாவின் வாழ்க்கை முறையை நிலைகுலைய வைத்தது. வறியவர்களையும் அன்னை திரேசாவையும் கல்கத்தா கைநீட்டி அழைத்தது. கல்கத்தா இல்லை என்றால் அன்னை திரேசாவும் இல்லை என்ற அளவிற்கு அன்னையின் பணி கல்கத்தாவில் ஆழ வேரூன்றியது.



இந்த காலகட்டத்தில் பசி, பட்டினியால் செத்து மடிந்தவர்கள் இரண்டு இலட்சத்துக்கு மேல். இரண்டு பக்கங்களாக கல்கத்தா காட்சியளித்தது. அழகும் - அருவருப்பும், ஆடம்பரமும் - வறுமையும், மாடமாளிகைகளும் - சாக்குக்குடில்களும், பெருமையும் - சிறுமையும் என இரண்டு வர்க்கங்களாக அமைந்திருந்தது. அங்கே வாழ்ந்த அகதிகள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி படுக்க பாயின்றி, அரை நிர்வாணிகளாக சாக்கடையோடு சாக்கடையாக, குப்பையோடு குப்பையாக குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

கல்கத்தா வீதியில் கண்ட தெருவோர அவலநிலைகள், வறுமை நிலை, முனகல்கள், வாழ்க்கை வக்கிரங்கள், பிணியோடு ஒட்டிக் கொண்டிருக்கும், வாடிய பட்டப்பகல், பட்டினிச்சாவுகள் போன்ற துயரமான காட்சிகள் திரேசாவின் துறவு வாழ்வை ஒரு கேள்விக் குறியாக்கியது. இவையே அன்னையை லொரோட்டோ சபையைவிட்டு வெளியேறி தெருக்களில் வாழும் ஏழைகளுக்கு பணி செய்ய தூண்டியது. 1948 இல் லொரோட்டோ துறவறசபையை விட்டு, ஏழைகள் மத்தியில் ஏழையோடு ஏழையாக இருந்து பணியாற்றுவதற்காக மார்கழி 21 - 1948ல் தனது சிறப்பான பிறரன்புப் பணியை ஆரம்பித்து தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வையும் சிறப்பான பணியையும் ஏழைமக்களுக்கும், நோயுற்ற நோயாளிகளுக்கும் சேரிகளில் வாழ்வோருக்கும் அர்ப்பணித்தாள்.

அன்னையின் ஏழ்மையான வாழ்வும், அர்ப்பணிப்பு நிறைந்த பணிவாழ்வும், கடவுளிடம் கொண்ட நம்பிக்கையான வாழ்வும் உலகமக்களை அவள்பால் ஈர்த்தது. இதுவே அவர்கள் அன்னையின் பணிக்காக பண உதவி, பொருள் உதவி செய்வதற்கும் காரணமாக அமைந்தது. இவ்வாறாக கைவிடப்பட்டவர்களுக்கும், மரணத்தின் வரவை எண்ணி இருப்போர்களுக்கும், சேரிபுற குழந்தைகளுக்கும் காட்டிய அன்னையின் தியாக வாழ்வே 1979 மார்கழி 10ஆம் நாள் பெருமைக்குரிய நோபல் பரிசினை பெறுவதற்கு தகுதியும், நீதியுமாய் இருந்தது.

## அன்னையின் இறுதிப்பயணம்

1997 செப்டெம்பர் 5ஆம் திகதி அன்று முதல் வெள்ளிக்கிழமை யாகையால், அன்புப் பணியாளர் சபை சிற்றாலயத்தில் பிற்பகலில் நற்கருணை ஆராதனை நடைபெறுவது வழக்கம் அன்று அன்னை இயலாத நிலையில் இருந்தமையால் சிற்றாலயத்தில் இருந்து சபைத்தலைவி நற்கருணையை அன்னையின் அறைக்கு கொண்டு வந்தார். அன்னை நற்கருணை ஆண்டவருடன் ஒரு சில மணித்துளிகளை செலவிட்டு விட்டு இரவு உணவை எடுத்த பின்னர் 7.30 மணிக்கு படுக்கைக்குச் சென்றதும் கடுமையாக முதுகு வலியால் மூச்சுத்திணறி வேதனைப்படுவதைக் கண்ட அருட்சகோதரி ஜெற்றூட் வைத்தியருக்கு செய்தி அனுப்பினார். அவரிடம் உடனே வந்து பிராணவாயு இயந்திரத்தைப் பொருத்தி இதயத்துடிப்பு, நாடித்துடிப்புக்களை அறிந்து ஒரு மணி நேரம் போராடினார்.

"டாக்டர்! என்னால் மூச்சுவிட முடியவில்லை என்று கூறிய அன்னையில் கடைசி வார்த்தைகள் பக்கத்தில் நின்ற அருட்சகோதரி ஜெற்றூட் காதிலில் கேட்டன. 'இயேசுவே! நான் உம்மை நேசிக்கிறேன் இயேசுவே..... அருகில் நின்ற அருட்சகோதரிகளின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தோடின. அன்னை இல்லம் கண்ணீர் குளமாயிற்று. கல்கத்தா கண்ணீர்க் கடலாயிற்று. உலகம் கவலை மேகத்தில் மிதந்து நீர் சொரிந்தது அன்னை இவ்வுலக வாழ்வுப் பயணத்தை முடித்துக்கொண்டு புனிதர்கள் சல்லாபிக்கின்ற வானவர் குலத்தில் சேர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

**Fr. Joseph Vaz and the Laity**

At a crucial period in the history of the Catholic Church in Sri Lanka, when the Dutch East Indian Company took every possible measure to wipe out Catholicism from the country completely, Fr. Vaz entered as a beggar and reorganized and revitalized the Church amidst many dangers and persecutions. In his efforts Fr. Vaz received the assistance and the cooperation of the lay Catholics wherever he went in the country. Due to his sanctity, exemplary holy life and the interest he had in the welfare of the people, he was gradually able to reorganize and rebuild the Church in Sri Lanka.

**The vision of St. Joseph**

1. His work in Kannada was a success owing to his patience, humility and the zeal for the spiritual welfare of the people.
2. Being a translator to the Franciscan mission, he translated the way of the cross and other meditations into Konkani and later into Tamil and Sinhala.
3. He revived the religious community into Religious Congregation Oratorian of St. Phillip Neri with the foresight of maintaining continuity in the Missionary work.
4. He took John, a faithful family dependant and two other confreres. John remained faithful to the Missionary work.
5. He was well equipped with the knowledge of Tamil Language when he learned in the North of Sri Lanka.
6. Being a victim of cholera in Jaffna, he gained the experience to work among the sick, especially in Kandy when small pox struck the City.
7. His experience in prison in Kandy times out to be a blessing. He could not return to Goa, obeying the Letter from his superior.
8. He taught Latin to John in order to help him, to recite the office prayer.
9. In order to shepherd the Catholics in Sri Lanka, he declined to accept the offer of Bishopric.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. He identified the talents of Fr.Jacome Gonsalvez who specialized in Tamil and Sinhalese Languages and produced Christian devotional literature. Fr. Jacome Gonsalve who is known as the Father of Christian literature in Sri Lanka perfected some works of Fr.Joseph Vaz.

## St. Joseph Vaz was victorious in integrating the social, cultural and spiritual elements in the process of evangelization in Sri Lanka

St. Joseph Vaz made use of his talents and gifts to preach Christ to others by his life and teaching. This short article analyses some of his basic extraordinary talents and gifts which helped him to evangelize the people according to the above mentioned statement.After 30 years of absence of priests in Sri Lanka St. Joseph Vaz, born in Goa, India, an Oratorian priest had a great desire to evangelize.

Though he was born in the Portuguese background in Goa, clinked to the Eastern religious values .He cherished and fostered the Eastern culture and language .In Sri Lanka he adopted the native way of life including food and clothing. He was at ease with the religious, ascetic life of the people. As he was in the 3rd order of St. Francis he loved the nature and we see him unharmed nature and wild beasts.The Goanist priests who followed him were well trained in native medicine. In Goa they had indigenous hospitals also. Naturally St. Joseph Vaz also had herbal medicinal knowledge and was able to approach many people and introduce Christ to them. Oratorian priests were giving herbal medical assistance even to the king of Kandy. St. Joseph Vaz was a man of deep trust in God with which was able to carry out his whole ministry amidst of all trails and difficulties. He was aware of the need of the sacrament of reconciliation before the holy mass and was successful in implementing it.St. Joseph Vaz was a man who loved all beyond all barriers whether the people were sick or poor, educated or uneducated Hindu or Christian, Muslim or Buddhist he loved them all and rendered his immense services to them all. Because of all these noble qualities he was able to win the hearts of the rulers as well as the people.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Catechetical Methods of St. Joseph Vaz

St. Joseph Vaz is an apostle who by his very life and action walked in the path of the Twelve. He employed various Catechetical Methods in a situation where Dutch dominion was getting more and more tough. He was keenly interested in contextualizing his missionary activities. He was the first Asian missionary who led the opportunity of organizing a mission according to his own ideas. He worked nine years alone in this Island. He made his missionary journeys, on foot and he stayed in the ordinary people's humble dwellings and listened to their worries and came to know their weaknesses and struggles. His unique Method of Catechism was in the form of adaptation and inculturation. From the testimony given by his fellow missionaries, the rested very little and most of the time, was engaged in praying, teaching local languages to the fellow missionaries or instructing others in Christian doctrines and Methods. The greatest desire of Fr.Vaz was to serve God in the poor, suffering and the neglected. He went from village to village encouraging the faithful, instructing, exhausting, administering the Sacraments and teaching all to be proud of their faith. In every village, he appointed Muppus and Annavis to instruct children and others and also to gather them on Sunday and Feast days in chapels to pray and fulfill their Sunday Obligations. St. Joseph Vaz was indeed a man with ardent faith and zealous missionary indeed.

## Ministerial Attitudes of Saint Joseph Vaz

We all know that Saint Joseph Vaz played an important role in the growth of the Christian faith in Sri Lanka. His life and mission portrays an extraordinary model for all of the ministers of this age. Having a clear picture about His ministerial attitudes towards His mission will surely help us all in our different ministries today. At first we should understand that He is a man of Prayer, committed totally to the will of the Heavenly Father. His zeal for souls and his humility and respect towards others is a clear example of his Saintly life. He is a man who loves peace and who cares for the poor. On the whole, his life becomes a good lession for all of us.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SAINT MOTHER TERESA

Saint Mother Teresa was born on August 26.1910 to a Catholic Albanian family in present day Macedonia. Her parents named her Gonxha Agnes Bojaxhice. At the age of eighteen she decided to become a missionary sister in India. After finishing her novitiate, she entered in to India and began a successful ministry of teaching. In 1937, after her final profession of vows she was called to follow Loreto tradition. At that time Calcutta was in pathetic and difficult position, there were poor, sick, dying was yet to come. God called her to be as divine shepherd went after His lost sheep. She knew what she was being called to do. In October 1950, her new Missionaries of Charity Congregation was formally established. In 1979; she was named the recipient of the Noble Peace Prize' which she accepted for the glory of God and in the name of the poor. Eventually on 5th of September 1997, Mother Teresa was touched by God and in turn, she will continue to touch many others from heaven as one of the Saints.






"இறையியல் கோலங்கள்"
வாசகர்கள் அனைவருக்கும்
எம் இனிய நத்தார்,
புதுவருட நல் வாழ்த்துக்கள்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 200/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
Euro 18

தனிப்பிரதி 80/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 200/=
Foreign (Incl.postage) U.S.$ 20
Euro 18
Single Copy Rs.80/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org